விலை ரூபா: 8.00

*Registered as a Newspaper in Srilanka*

# வலம்புரி

*Valampurii*

பக்கங்கள்:- பன்னிரண்டு

சங்கு 06 | வள்ளுவர் ஆண்டு 2036 | புரட்டாதி 26 புதன்கிழமை (12.10.2005) | தொலைபேசி 222 3378, 222 7644 | ஒலி 297

ராம்கோ
MADRAS CEMENTS LTD
ஆசியாக் கண்டத்தில் முதலாம்தரத் தொழிற் சாலையிலிருந்து தயாரிக்கப்பட்டது
RAMCO CEMENT
சீமெந்து

## இளம்பரிதி -கண்காணிப்புக்குழு பளையில் சந்தித்துப் பேச்சு

(பளை)

தமிழீழ விடுதலைப்புலிகளின் யாழ். மாவட்ட அரசியல் துறைப்பொறுப்பாளர் சி.இளம்பரிதிக்கும் போர்நிறுத்தக்கண்காணிப்புக்குழுவின் யாழ்.மாவட்ட பிரதித்தலைவர் ஜோன் மற்றும் கண்காணிப்பாளர் பற்றிக் ஆகியோருக்குமிடையிலான சந்திப்பொன்று நேற்று முன்தினம் பளையில் அமைந்துள்ள யாழ்.மாவட்ட அரசியல்துறைச் செயலகத்தில் நடைபெற்றது.

இச் சந்திப்பின்போது யாழ்.மாவட்டத்தின் இராணுவக்கட்டுப்பாட்டுப் பகுதியில் அரசியல் நடவடிக்கையை மேற்கொண்டுவந்த போராளிகள் வெளியேறி தமது கட்டுப்பாட்டுப் பகுதிக்குச் சென்றதை தொடர்ந்து யாழ்.மாவட்டத்தில் தற்போது எழுந்துள்ள நிலைமைகள் குறித்து ஆராயப்பட்டது.

இச் சந்திப்பின்போது கண்காணிப்புக் குழுவிடம் சி.இளம்பரிதி தெரிவிக்கையில் அரசியல்துறைப் (12 ஆம் பக்கம் பார்க்க)

## தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சை பெறுபேறு இன்று வெளியாகும்

(கொழும்பு)

கடந்த ஓகஸ்ட் மாதம் 20ஆம் திகதி நடைபெற்ற ஐந்தாம் தரப் புலமைபரிசில் பரீட்சைப் பெறுபேறுகள் இன்று வெளியாகுமென பரீட்சைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

பெறுபேறுகளை வெளிப்படுத்துவதற்கான அனைத்து நடவடிக்கைகளும் பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக பரீட்சைகள் ஆணையாளர் நாயகம் அனுரஎதிரசிங்க தெரிவித்தார்.

கொழும்புப் பாடசாலைகளுக்கான பெறுபேறுகளை இன்று பரீட்சைத் திணைக்களத்தில் பெற்றுக்கொள்ள முடியுமெனத் தெரிவித்த ஆணையாளர் நாயகம் பெறுபேறுகளை www.donets.lk என்ற இணையத்தளம் மூலமாகவும் பார்வையிட முடியுமெனவும் கூறினார்.

இதேவேளை இவ்வருடம் இப்பரீட்சைக்கு சுமார் மூன்றரைஇலட்சம் மாணவர்கள் தோற்றியுள்ளனர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-7)

# மட்டக்களப்பு வவுணதீவில் புலிகளின் வாகனத் தொடரணி மீதான தாக்குதல் முயற்சி முறியடிக்கப்பட்டது

### மட்டு-அம்பாறை சிறப்புத்தளபதி கேணல் பானு தெரிவிப்பு



(மட்டக்களப்பு)

மட்டக்களப்பு வவுணதீவு இராணுவமுகாமிற்கு அண்மித்த பகுதியில் தமிழீழ விடுதலைப்புலிகளின் வாகனத் தொடரணி சென்று கொண்டிருந்தபோது படைத்தரப்பின் புலனாய்வுப் பிரிவினராலும் , துணைப்படைகளாலும் திட்டமிட்டு மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் நடவடிக்கை தம்மால் முறியடிக்கப்பட்டதாகவும் தாக்குதலில் ஈடுபட்டவர்கள் விரட்டியடிக்கப்பட்டதாகவும் மட்டு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு தெரிவித்துள்ளார்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## புலிகளின் முயற்சிக்கு யுனிசெப் பாராட்டு

(கிளிநொச்சி)

தமிழீழ விடுதலைப்புலிகள் தமது அமைப்பில் தாமாக முன்வந்து இணையவரும் வயது குறைந்த சிறார்களை பெற்றோரிடம் ஒப்படைத்து வரும் முயற்சிக்கு ஐக்கிய நாடுகள் சபையின் குழந்தைகள் நல அமைப்பான யுனிசெப் திருப்தியும் மகிழ்ச்சியும் தெரிவித்துள்ளது.

தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனை யுனிசெப்பின் இலங்கைக்கான வதிவிடப்பிரதிநிதியாக புதிதாக பதவியேற்றுள்ள வெங்கர் பென்ஜே அனா அம்மையார் நேற்று கிளிநொச்சியில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இச் சந்திப்பின் போது பெற்றோர்களிடம் சிறார்களை ஒப்படைத்து வரும் புலிகள் முயற்சி குறித்து தனது திருப்தியையும் மகிழ்ச்சியையும் வெங்கர் பென்ஜே அனாஅம்மை



யார் தெரிவித்தார்.

மேலும் யுத்தத்தினால் பாதிக்கப்பட்ட சிறுவர்களுக்காக (12 ஆம் பக்கம் பார்க்க)

## கதிர்காமர் கொலை வழக்கு

## தொலைபேசி விற்பனையாளரை விசாரிக்க நீதிமன்றம் உத்தரவு!

(கொழும்பு)

முன்னாள் வெளிவிவகார அமைச்சர் லக்ஷ்மன் கதிர்காமர் கொலை வழக்கில் கொழும்பில் இயங்கும் 16 தொலைபேசி விற்பனை நிலையங்கள் குறித்து விசாரணைகளைமேற்கொண்டு அறிக்கை சமர்ப்பிக்குமாறு கொழும்பு மேலதிக நீதிவான் அஜித் அனவரத்ன கொழும்பு குற்றப்புலனாய்வுப் பிரிவிற்கு உத்தரவு பிறப்பித்துள்ளார்.

லக்ஷ்மன் கதிர்காமரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விசாரணைகள் செய்யப்பட்டவர்களிடமிருந்து பல தகவல்கள் பெறப்பட்டுள்ளன.

பொய்யான பெயர்களில் போலி அடையாள அட்டைகளைத் தயாரித்து இந்த தொலைபேசிகளை பெற்றிருப்பதாக தகவல்கள் கிடைத்துள்ளதென குற்றப்புலனாய்வுப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.

மேலும் பயங்கரவாதம் மற்றும் திட்டமிட்டு குற்றச்செயல் (12 ஆம் பக்கம் பார்க்க)

## கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் நேற்றுச் சுட்டுக்கொலை

(கோப்பாய்)

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் ந.சிவகடாட்சம் (வயது 54) நேற்றிரவு 8.30 மணியளவில் இனந்தெரியாதோரால் சுட்டுக் கொல்லப்பட்டுள்ளார்.

இச் சம்பவம் கோப்பாய் வடக்கு இலகடியில் அவரது வீட்டுக்கு முன்பாக இடம்பெற்றுள்ளது.

சம்பவம் பற்றித் தெரியவருவதாவது ;

கோப்பாய் கிறிஸ்தவக் கல்லூரி அதிபர் சிவகடாட்சம் அவர்களின் வீட்டிற்கு நேற்றிரவு சென்ற இனந்தெரியாதோர் அவரது வீட்டுக் கேற்றிற்கு முன்பாக நின்றவாறு அவரை அழைத்ததாகவும், அவர்களுக்குப் பதில் சொல்ல வெளியேசென்ற அவர் இனந்தெரியாதோரால் சுட்டுக்கொல்லப்பட்டதாகவும் தெரியவருகிறது.

இச் சம்பவம் குறித்து கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

சம்பவ இடத்திற்கு இன்று அதிகாலை 12.30மணிக்குச் சென்ற யாழ்.மேலதிக நீதிவான் திருமதி சிறிநிதி நந்தசேகரன் சடலத்தைப்பார்வையிட்டதுடன் விசாரணைகளை மேற்கொண்டார்.

பிரேத பரிசோதனைக்காக சடலம் யாழ். போதனாவைத்தியசாலையில் கோப்பாய் பொலிஸாரால் ஒப்படைக்கப்பட்டது.

கோப்பாய் தேசிய எழுச்சிப்பேரவையின் முக்கியஸ்தரான இவர் ஓர் சமூகசேவையாளர் என்பதும் குறிப்பிடத்தக்கது. (இ-8;4)

EXPOAIR
your friend in the skies...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள்
021 - 222 3891, 222 6297, 077-2349999,
011-2372952/3, 011-2360290/1
e.mail:- jaffna@expoavi.com,reservations@expoavi.com.
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
எக்ஸ்போ எயார்
வானத்தில் உங்கள் நண்பன்...

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

# இலங்கையின் உரிமைகளை மீறும் இந்திய சேதுகால்வாய்த் திட்டம்

## பசுமை இயக்கம் சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இந்தியக் கூட்டரசு மேற்கொண்டு வரும் சேதுகால்வாய்த் திட்டம் மூலம் இலங்கையின் அரசியல் மற்றும் மக்கள் உரிமைகள் மீறப்பட்டுள்ளதாக இலங்கை பசுமை இயக்கம் குற்றஞ்சாட்டியுள்ளது.

இந்தத் திட்டத்தைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தி வெளிவிவகார அமைச்சுக்கு பசுமை இயக்கம் கடிதமொன்று அனுப்பியுள்ளது.

பசுமை இயக்கம் அனுப்பியுள்ள கடிதத்தில் இந்திய அரசாங்கத்தின் சேதுகால்வாய்த் திட்டமானது சர்வதேச அரசியல் மற்றும் மக்கள் உரிமைகளின் சட்ட விதிகளை மீறுவதாகவுள்ளது.

இந்துமா சமுத்திரத்தில் பாரிய தாக்கங்களை ஏற்படுத்தும் என்று சேதுகால்வாய் திட்டம் தொடர்பான அண்மைய ஆய்வுகள் அனைத்தும் கூறுகின்றன. பருவ மழை குறைதல் உள்ளிட்ட பல காலநிலை மாற்றங்கள் இலங்கையிலும் தென்னிந்தியாவிலும் ஏற்படக்கூடிய சாத்தியங்கள் உள்ளன.

மன்னார் வளைகுடாப் பிரதேசத்தில் நீர்நிலை மாற்றங்களையும் இந்தத் திட்டம் உருவாக்கிவிடும். இந்த நிலையில் இத்திட்டத்தைச் செயற்படுத்துதல் தொடர்பாக இலங்கையுடன் இந்திய அரசு ஆலோசனை நடாத்தத்தவறி சர்வதேச விதி முறைகளுக்கு எதிரானது.

இவ் விடயத்தில் அரசும் தன் கடமையைச் செய்யவில்லை. கடல்சார் சூழலில் கடல்சார் உயிரி வாழ்க்கையிலும் மன்னார் வளைகுடாப் பிரதேசம் பாரிய முக்கியதுவம் வாய்ந்தது. அரிய வகை கடல் வாழ் உயிரினங்கள் இங்கு உள்ளன. பவளப் பாறைகள் நிறைந்து காணப்படுகின்றது. இந்த சேதுக்கால்வாய்த் திட்டத்தால் கடல்சார் சூழலியலும் உயிரி வாழ்க்கையும் சிதைந்து போக வாய்ப்புண்டு என்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. (ற-4)

# தப்பியோடிய இராணுவ அதிகாரி துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்கானார்

(திருகோணமலை)

திருகோணமலை உப்புவெளிப் பிரதேசத்தில் அபயபுர இராணுவ முகாமுக்கு அருகில் இடம்பெற்ற துப்பாக்கிப் பிரயோகத்தில் இராணுவ அதிகாரியொருவர் காயமடைந்துள்ளார்.

நேற்று முன்தினம் அதிகாலை 3.30மணியளவில் இராணுவத்தினர் மேற்கொண்ட சோதனை நடவடிக்கையின்போது இனம்தெரியாத ஒருவர் தப்பியோடியிருக்கின் றார்.

அவரை ஓடவேண்டாம் என்று இராணுவத்தினர் தெரிவித்துள்ளார்கள். அவர் இராணுவத்தின் கட்டளைக்கு செவிமடுக்காத நிலையில் இராணுவத்தினர் சந்தேக நபர் மீது துப்பாக்கிபபிரயோகத்தை மேற்கொண்டிருப்பதாக தெரிவிக்கப்படுகின்றது.

இதில் அந்த நபர் காயமடைந்துள்ளார். இதன் பின்னரே காயமடைந்தவர் இராணுவ அதிகாரி என்று அடையாளம் காணப்பட்டுள்ளார். காயமடைந்த அதிகாரி திருகோணமலை இராணுவ வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார். துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட இராணுவச் சிப்பாய் உப்புவெளி பொலிஸாரினால் கைது செய்யப்பட்டிருப்பதோடு இந்த சம்பவம தொடர்பான விசாரணைகளை இராணுவத்தினர் மேற்கொண்டுவருகின்றார்கள். (த-9)

# வாணி விழா

புங்குடுதீவு ஸ்ரீசுப்பிரமணிய மகளிர் வித்தியாலயத்தில் வாணி விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு பாடசாலை மண்டபத்தில் அதிபர் நா.பஞ்சலிங்கம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதமவிருந்தினராக தீவக வலயக் கல்வி நிர்வாக பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜி.வி.இராதாகிருஸ்ணனும் சிறப்பு விருந்தினர்களாக அழகியல் உதவிக்கல்விப்பணிப்பாளர் திருமதி ஸ்ரீஇராமச்சந்திரன், ஆரம்பக்கல்வி உதவிக் கல்விப்பணிப்பாளர் மு.சிவபாதம், ஓய்வு பெற்ற முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசா, ஓய்வு பெற்ற அதிபர் செல்வி ம.சுப்பிரமணியம், வடஇலங்கை சர்வோதய அறங்காவலர் செல்வி பொ.ஜமுனாதேவி, சைவசமய ஆசிரிய ஆலோசகர் செல்வி எம்.ஆர்.ஜெயலட்சுமி ஆகியோரும் கலந்துகொள்ளவுள்ளனர்.

உரைகளைத் தொடர்ந்து இதில் மாணவர்களின் கலைநிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன. (ற-126)

# இராசி பலன்

**12.10.2005**
**(புரட்டாதி 26, புதன்கிழமை)**
**நவமி காலை 7.03 மணிவரை**
**தசமி பின்னிரவு 04.41மணிவரை**
**திருவோணம் பின்னிரவு 1.14 மணிவரை**
**இராகுகாலம்12.02-1.32 மணிவரை**
**சுபநேரம்4.32-6.02 மணிவரை**
**விஜயதசமி, கேதார கௌரிவிரதாரம்பம்**

- **மேடம்** — அதிகாரம், தூரதேசச்செய்தி, காரிய நன்மை, பிறர்உதவி.
- **இடபம்** — அதிக பிரயாசை, கட்டுப்பாடு, பிரயாணம் பிதாசிந்தை.
- **மிதுனம்** — எதிப்பாராத பிரச்சினை, காரியதாமதம், பிறருக்கு உதவுதல், தனவிரயம்
- **கடகம்** — தெய்வசிந்தை, எடுத்தகாரியம் கைகூடும், போசனசுகம், பொருள் சேர்க்கை.
- **சிங்கம்** — சுவாரஸ்யம், எடுத்த கருமங்கள் கைகூடும், போசனசுகம், பகைவரால் நன்மை.
- **கன்னி** — சொத்துப்பிணக்கு, முயற்சி தாமதம், பண விரயம், உறவினர் சந்திப்பு.
- **துலாம்** — மனச்சஞ்சலம், எடுத்தகாரியம் தாமதமாகும், வேலையில் ஆர்வம், சுபசெலவு.
- **விருச்சிகம்** — அந்நியர் சந்திப்பு, முயற்சிகை கூடும், பிரயாண நன்மை, பொருள்சேர்க்கை.
- **தனுசு** — உணர்ச்சி வசப்படுதல், காரியதாமதம், பணவிரயம், குடும்பக் கவலை.
- **மகரம்** — சிந்தனை மிகுதி, பெரியோர் சந்திப்பு, முயற்சி தாமதம், தொழில் நன்மை.
- **கும்பம்** — இடமாற்றம், சுபசெலவு, முயற்சி தாமதம், வேலைச்சுமை.
- **மீனம்** — எதிர்பாராத நன்மை, நண்பரால் உதவி, காரிய சித்தி, கீர்த்தி.

பஞ்சாங்க நேரப்படி கணிப்பிடப்பட்டது.
- வளவன்

# பரீட்சை

(காரைநகர்)

யாழ்ப்பாணத் திருமறைப் பரீட்சைச் சபை நடாத்தும் கிறிஸ்தவப் பாடப் பரீட்சை இன்று புதன்கிழமை நடைபெறவுள்ளதாக பரீட்சை ஒருங்கிணைப்பாளர் அருட் திரு வி.பத்மதயாளன் தெரிவித்துள்ளார்.

யாழ்.மாவட்ட அனைத்துப் பாடசாலைகளிலும் பரீட்சைக்கான விண்ணப்பங்கள் பெறப்பட்டுள்ளதாகவும் மேலும் தெரிவித்துள்ளார். (த-246)

# அன்பளிப்பு மூலம் தமிழ் மக்களை ஏமாற்றி விடமுடியாது

## தமிழ் தேசிய விழிப்புணர்வுக் கழகம் கண்டனம்

(யாழ்ப்பாணம்)

இலங்கை இராணுவத்தின் 56ஆவது ஆண்டு நிறைவையொட்டி யாழ்.மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோன் கடந்த ஞாயிற்றுக்கிழமை யாழ்.பொதுசன நூல் நிலையத்துக்கு ஒரு இலட்சம் ரூபா அன்பளிப்பாக வழங்கியது தொடர்பாக தமிழ்த் தேசிய விழிப்புணர்வுக்கழகம் கண்டன அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

இந்த விதத்தில் அன்பளிப்புகளை வழங்குவதன் மூலம் தமிழ் மக்களின் மனதில் மாறாத வடுவாகப் பதிந்துள்ள இலங்கை அரசும் படையினரும் சிங்களக் காடையர்களும் திட்டமிட்ட வகையில் செய்த எத்தனையோ ஆயிரம் கோடி ரூபா பெறுமதிமிக்க நூலநிலைய எரிபபினை மறந்துவிடச் செய்ய முடியாது என அவ்வறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (து)

# நேர்முகப் பரீட்சை முடிவடைந்தது

(சுதுமலை)

யாழ்.மாவட்டத்தில் இயங்கும் சுகாதாரவைத்திய அதிகாரப் பிரிவில் சேவையாற்றும் சுகாதாரத் தொண்டர்களிற்கான நேர்முகப் பரீட்சை யாவும் முடிவடைந்துள்ளது. இந நேர்முகப்பரீட்சைக்கு ஏழு சுகாதார வைத்திய அதிகாரி பிரிவுகளிலும் இருந்து சுமார் 750க்கும் அதிகமான தொண்டர்கள் வரையில் தோற்றியதாக தெரிவிக்கப்படுகின்றது.

தற்போது பிரதி மாகாண சுகாதார சேவைகள் திணைக்களத்தின் கீழ் இயங்கும் வைத்தியசாலைகளில் நூற்றிஐம்பது வெற்றிடங்கள் மட்டுமே உள்ளதாகவும் எனவே தொண்டராக சேவையாற்றிய காலம் மறறும் அனுபவம், கல்வித்தரம் போன்றவற்றை கருதியே நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்ப்பாணம பிரதி மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டாக்டர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார். (த-252)

# குடாநாட்டில் தேர்தல் சுவரொட்டிகள்

இலங்கை ஜனாதிபதித் தேர்தலையொட்டி குடாநாடெங்கும் தேர்தல் சுவரொட்டிகள் துரிதகதியில் ஒட்டப்பட்டு வருவதைக் காணக் கூடியதாக இருக்கிறது. தேர்தல் திகதி அறிவிக்கப்பட முன்னரே கொடிகாமம் மீசாலைப் பகுதிகளில் "பொய் வாக்குறுதியல்ல" வெற்றி! மக்கள் விருப்பிலதான் வெற்றி! என்ற வாசகங்களுடன் பச்சை வர்ணத்தில் யானைக்கூட்டங்கள் அடங்கிய படத்துடன் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டிருக்கின்றன. அவை யாரால் வெளியிடப்பட்டவையென்ற விபரங்கள் எதுவும் தெரியவில்லை.

இதேவேளை ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி ஜே.வி.பி கூட்டு வேட்பாளராக மஹிந்த ராஜபக்ஷவை ஆதரித்து குடாநாட்டின் பல பகுதிகளிலும் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளன. இவை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் பெயருடன் சமாதானம் வலியுறுத்தப்பட்டுள்ள வாசகங்களுடன் வெளியிடப்பட்டுள்ளன. (து-124)

# ஐ.நா.செயலாளர் பதவிக்குப் போட்டி குழப்பத்தில் இலங்கை தூதரகங்கள்

ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகம் பதவிக்கு போட்டியிடப் போவதாக மேலும் ஒரு இலங்கை பிரதிநிதி கூறிவருகிறார். இலங்கையின் சார்பில் முன்னாள் வெளிவிவகார அமைச்சர் டிரோண்ட் பெர்னாண்டோ போட்டியிடுவதாக கூறப்பட்டது. அதன் பின்னர் இலங்கையின் உத்தியோக பூர்வ வேட்பாளராக ஜயந்த தனபாலவை சந்திரிகா குமாரதுங்க அறிவித்தார்.

ஜயந்த தனபாவுக்கு ஆதரவு திரட்டும் பணியில் வெளிநாடுகளில். உள்ள அனைத்து இலங்கை தூதரங்களும் முடுக்கிவிடப்பட்டன. தற்போது பிரஸ்ஸெல்சில் உள்ள நிரஞ்சன் டி சில்வா தேவ ஆதித்ய என்ற ஐரோப்பிய ஒன்றியத்தின் பாராளுமன்ற உறுப்பினர் இந்த பதவிக்கு தான் போட்டியிடவுள்ளதாக கூறிவருகிறார்.

ரணில் விக்கிரமசிங்கவின் முன்னாள் ஆலோசகரான இவர், இலங்கை ஜனாதிபதியாக ரணில் விக்கிரமசிங்க தேர்ந்தெடுக்கப்பட்டால் தன்னையே அரசாங்கம் வேட்பாளராக அறிவிக்கும் என்று தன் நண்பர்களிடம் கூறி வருவதாகவும் ரணில் இது தொடர்பில் உறுதியளித்துள்ளதாகவும் அவர் கூறி வருகிறார்.

இதனால் வெளிநாடுகளில் உள்ள இலங்கை தூதரகங்கள் கடுமையான குழப்பத்தில் ஆழ்ந்துள்ளன. (அ)

# நிறைவேற்ற முடியாத திட்டங்கள் எதுவும் ஐ.தே.கட்சியிடம் இல்லை

(கொழும்பு)

ஐக்கியதேசியக் கட்சியின் ஜனாதிபதி தேர்தல் விஞ்ஞாபனத்தில் நிறைவேற்றமுடியாத அபிவிருத்தித் திட்டங்கள் உள்ளடக்கப்படவில்லை என்று அந்தக் கட்சியின் பிரதித் தலைவர் கரு ஜெயசூரிய தெரிவித்துள்ளார்.

விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப்பட்டுள்ள அபிவிருத்தித் திட்டங்களை நடைமுறைப்படுத்துவதற்கு சர்வதேச ஒத்துழைப்புக் கிடைக்குமென்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

இலங்கைக்கு சுதந்திரம் கிடைத்து பல ஆண்டுகள் கடந்துள்ள போதிலும் மக்களுக்கு சிறந்த வாழ்க்கைத்தரத்தை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டிய நிலை இருப்பதாக அவர் தெரிவித்தார்.

ஐக்கியதேசியக் கட்சி ஆட்சிக்குவந்த ஒவ்வொரு சந்தர்ப்பத்திலும் பாரிய அபிவிருத்தித் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்பட்ட போதிலும் அரசாங்கம் மாறியதுடன் அவை கைவிடப்பட்டதாக அவர் சுட்டிக்காட்டினார்.

வத்தளைத் தேர்தல் தொகுதிக்கான ஐக்கியதேசியக்கட்சியின் கூட்டம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற போது ஜெயசூரிய இந்த விடயங்களைத் தெரிவித்தார். (த-9)

# நாட்டின் அனைத்துப் பிரச்சினைகளுக்கும் தீர்வுகாண மஹிந்தவால் முடியாது

(கொழும்பு)

ஜாதிகஹெல உறுமயக்கட்சியினால் கட்டியெழுப்பப்பட்ட மக்கள் பலத்திற்கு பிரதமர் மதிப்பளிக்க நேரிட்டுள்ளதாக ஜாதிக ஹெல உறுமயக்கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் அத்துரலிய ரத்ன தேரர் தொவித்துள்ளார்.

கண்டியில் கடந்த ஞாயற்றுக் கிழமை இடம்பெற்ற கூட்டமொன்றில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

மஹிந்த ராஜபக்ஷவை வெற்றிபெறச் செய்தால் அனைத துப்பிரசசினைகளுக்கும் தீர்வுகான முடியுமா என அவர் கேள்வி எழுப்பினார். அவரால் அனைத்துப் பிரச்சினைகளும் தீர்க்கப்படும் என நம்பவில்லை என்று குறிப்பிட்ட அவர் கஷ்டப்பட்டு மக்கள் பலம் ஒன்றிணைக் கட்டியெழுப்பியவுடன் அதற்கு பிரதமர் மஹிந்த தலை வணங்குகின்றார் எனவும் தெரிவித்தார்.

பிரதமர் மஹிந்த வெற்றிச் சின்னத்திலேயே வேட்பு மனுவினைத் தாக்கல் செய்தார் என்றும் எச் சின்னத்தில் கேட்டாலும் அவர் சிறிலங்கா சுதந்திரக்கட்சிக்கோ, அல்லது ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்புக்கோ சொந்தமானவர் அல்ல என தேரர் குறிப்பிட்டார். (த-4)

# வரவுசெலவுப் பிரேரணையைச் சமர்ப்பிப்பதற்கு ஐ.தே.க.எதிர்ப்பு

(கொழும்பு)

நவம்பர் மாதம் 8ஆம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப் படவுள்ள வரவு செலவுத்திட்டப் பிரேரணையை சமர்ப்பிக்க வேண்டாம் என்று ஐக்கிய தேசியக்கட்சி அரசாங்கத்தை கோரவுள்ளது.

அரசாங்கம் இந்த வரவுசெலவுத் திட்டப் பிரேரணையை சமர்ப்பிக்கும் போது எதிர்வரும் தோதலுக்கான வாக்குகளை பெறக் கூடிய சந்தர்ப்பம் ஏற்பட ஏதுவாகலாமெனவும் ஐக்கிய தேசிக் கட்சி நம்புகிறது.

ஆகவே இநத குறைநிரப்பு வரவுசெலவுத்திட்டத்தை அரசாங்கம் சமர்ப்பிக்காமலிருக்க என்ன உத்தியைப் பிரயோகிக்கலாம் என்பது குறித்து ஐக்கிய தேசியக்கட்சியின் நாடாளுடன்ற உறுப்பினர்கள் கூடி ஆராயவுள்ளதாக ஐக்கியதேசியக்கட்சியின் பிரதிச் செயலாளர் திஸ்ஸ அத்தநாயகக தெரிவித்தார். (து-9)

# அம்மை உள்ளத்தினுள்ளே இருக்க

கடவுள் நமக்கு அயலாக இல்லை. நம்மோடு கூட உள்ளார். நமது உள்ளத்தின் உள்ளே நந்தாவிளக்காக ஒளிர்கின்றார். அவரால் நம்மைக் கணப்பொழுதும பிரியமுடியாது. அன்னையிலும்



சால அன்புடன் நமது அகத்தே உறைந்து நம்மை வளர்த்து ஆளாக்குகின்றார். இது வெறும் நூலறிவன்று. இது பெரியோர்கள் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் கண்ட உண்மை. நாமும் கண்டு அனுபவிக்க வேண்டிய உண்மை இதன் பொருட்டே நமது சமயவாழ்வின் பல்வேறு நடைமுறைகளும் அமைக்கப்பட்டிருக்கின்றன. நவராத்திரி விரத காலமும் இவ்வாறான ஒரு ஏற்பாடேயாம்.

நவராத்திரி விரத காலத்திலே நாம் கடவுளை அம்மையாக நினைந்து வழிபடுகின்றோம். நாம் வைக்கும் கும்பம் அம்மையின் ஒரு வடிவே. அம்மைக்கு இறுதி மூன்று இரவும் வெண்பட்டுச் சாத்தி வெண்மலர் சூட்டி வழிபடுகிறோம். இந்நாள்களில் நாம் அன்னையைப் போற்றும் தோத்திரங்களுள் சரசுவதி அந்தாதியும் ஒன்று அதனைக் கவிச்சக்கரவர்த்தி கம்பர் பாடினார் என்பர். அம்மையைத் தன் நெஞ்சிலும் நாவிலும் கண்டு கொண்டிருக்கும் கவிச்சக்கரவர்த்தி ஒருவரே அக்கவியினைச் சொல்ல முடியும் என்பதில் ஐயமில்லை. இக்கவிகளைப் பொருளுணர்ந்து பாடுவது. அம்மை நம் நெஞ்சிலும் உறைகின்றார் என்னும் நம்பிக்கையை உறுதிப்படுத்தவும் உணர்ந்துணர்ந்து இன்புறவும் உதவியாயிருக்கும.

சரசுவதி அந்தாதியின் ஆய கலைகள் எனத் தொடங்கும் காப்பு பலருக்கும் தெரிந்த ஒரு வெண்பா இவ் வெண்பாவிலே உள்ள தூய. உருப்பளிங்கு போல் வாள் என் உள்ளத்தினுள்ளே இருப்பள் என்னும் வாசகம் நாம் உள்ளத்தினுள்ளே இருத்தவேண்டிய வாசகம். அவ்வாறே இறுதிச் செய்யுளிலுள்ள "என்பேதை நெஞ்சில் இருந்தருளும் செஞ்செல் வஞ்சி" என்பதும் எம் நெஞ்சினுள் இருக்க வேண்டிய செஞ்சொல். காப்பு முதல், இறுதிச்செய்யுள் வரையான அந்தாதிச் செய்யுள் முழுவதும் அம்மையை நெஞ்சிலும் நாவிலும் கொண்ட அருளாளரால் பாடப்பட்டமையால் பக்தியோடு பாராயணம் செய்வோரது நெஞ்சிலும் நாவிலும் அம்மையை உறையச் செய்யும் ஆற்றல் அதற்குளது. அதிற் சில பாடல்களை யாதல் இங்கு எடுத்துக் காட்டுதல் நன்றெனத் தோன்றுகிறது.

சரசுவதி அம்மை வெள்ளைத் தாமரைப்பூவில் வீற்றிருப்பாள் எனப் பலரும் அறிவர். அம்மை வீற்றிருக்கும் வெள்ளைத்தாமரை அன்பரது வெள்ளை உள்ளத் தண்டாமரையேயாம். அந்தாதியின் முதல் வணக்கப் பாடலில் என் மனத் தாமரையாட்டி எனவரும் செஞ்சொல் அம்மையை எம்மனத்திலும் எழுந்தருளச் செய்யவல்லது. நாயகமான அச்செஞ்சொல் விளங்கும் முதற்பாடல் மேல்வருவது:-

**சீர்தந்த வெள்ளிதழ் பூங்கதலாசனத்தேவி செஞ்சொல்**
**தார் தந்த என்மனத் தாமரையாட்டி சரோருகம்மேல்**
**பார்தந்த நாதன் இசைந்தந்த ஆரணப்பங்கயத்தாள்**
**வார் தந்த சோதி அம்போரு கத தாளை வணங்குதுமே**

அம்மை அழுக்கொன்றும் இல்லாது தூவெளியாய் இருக்கும் மனத்தில் உவந்திருப்பதுடன். ஒன்றும் அறியாப் பேதை நெஞ்சிலும் இருக்கும் திறத்தை விரிக்கும் இரு பாமலர்கள் மேல்வருவன:-

**ஒருத்தியை ஒன்றுமில்லா என் மனத்தில் உவந்து தன்னை**
**இருத்தியை வெண்கமலத்து இருப்பாளை எண்ணெண் கலை தோய்**
**கருத்தியை ஐம்புலனும் கலங்காமல் கருத்தை எல்லாம்**
**திருத்தியை யான் மறவேன் திசை நான் முகன் தேவியையே**

**பெருந்திருவும் சயமங்கையுமாகி என்பேதை நெஞ்சில்**
**இருந்தருளும் செஞ்சொல் வஞ்சியைப் போற்றில் எல்லா உயிர்க்கும்**
**பொருந்திய ஞானம் தரும் இன்ப வேதப் பொருளும் தரும்**
**திருந்தியசெல்வம் தரும் அழியாப்பெருஞ்சீர் தருமே.**

அம்மை நம் நெஞ்சிலுறைந்து நமது நெஞ்சத்து அழுக்கையெல்லாம் போக்குகின்றார் என்பது அழுக்கு மனத்தவரான நமக்கு ஆறுதளிக்கும் செய்தியாகும். அம்மை வேதத்தை இருப்பிடமாகவும் படையாகவும் கொண்டிருப்பது அறிவால் அழுக்கற்றுதற்கேயாம் புறவிருளை நீக்கும் கதிரவன் போல் அகத்தில் உறைந்து அகவிருளை நீக்கும் அம்மையின் பேரருளைப் போற்றும் இரு பாடல்கள் மேலவருவன:-

**மயிலே மடப்பிடியே கொடியே இளமான்பிணையே**
**குயிலே பசுங்கிளியே அன்னமே மனக்கூர் இருட்கோர்**
**வெயிலே நிலவெழும் மேனி மின்னே இனிவேறுதவம்**
**பயிலேன் மகிழ்ந்து பணிவேன் உனது பொற்பாதங்களே**

**புந்தியின கூரிருள் நீக்கும் புதிய மதிய மென்கோ**
**அந்தியில் தோன்றிய தீப மென்கோ நல் அருமறையோர்**
**சந்தியில் தோன்றும் தபனன் என்கோ மணித்தாமம் என்கோ**
**உந்தியில் தோன்றும் பிரான் புயம் தோயும் ஒருத்தியையே**

அம்மை நம் நெஞ்சிலுறைந்து அகவிருளை நீக்கி அழுக்குமலம்

# வாராது இடர் எமக்கு

அம்மை விரும்பி உறையும் அன்றலர்ந்த புதுப்பூ மனமாகிய பனிநாள் மலர் என்பதைக் கூறும் பாமலர் மேல்வருவது:-

**இனி நான் உணர்வது எண்ணெண் கலையானை இலகு தொண்டைக்**
**கன நானும் செவ்விதழ் வெண்ணிறத்தாளைக் கமல அயன்**
**தனி நாயகியை அகிலாண்டமும் பெற்ற தாயை மனப்**
**பனி நாள் மலர் உறை பூவையை ஆரணப்பாவையையே.**

அம்மை உறையும் நான்கு இடங்களைக் கூறி அதிலொன்று அம்மையைப் பூக்கொண்டு பூசிக்கும் அன்பர்தம் சிந்தை எனக் கூறும் பாடல் மேல்வருவது:-

**பாவும், தொடையும், பதங்களும், சீரும் பலவிதமாய்**
**மேவும் கலைகள் விதிப்பாள் இடம் விதியின் முதிய**
**நாவும், பகர்ந்த சொல் வேதங்கள் நான்கும் நறுங்கமலப்**
**பூவும், திருப்பதம் பூவால் அணிபவர் புந்தியுமே.**

அகற்றி அருளுவதால் நாம் பல கலையும் அறியலாம். திருந்திய செல்வம் பெறலாம் பொருந்திய ஞானம் பெறலாம். ஈற்றில் முத்தியும் பெறலாம். ஆதலால் பெறலரிதாவதொன்றுமில்லை.

**"பாதாம் புயத்திற் பணிவார் தமக்குப் பலகலையும்**
**வேதாந்த முத்தியும் தந்தருள் பாரதி வெள்ளி தழ்ப்பூம்**
**சீதாம் புயத்தில் இருப்பாள் இருப்ப என் சிந்தையுள்ளே**
**ஏதாம் புவியில் பெறலரீ தாவது எனக் கினியே"**

அம்மை நம் உள்ளத்தில் உறைந்து உள்ளத்து அழுக்கையெல்லாம் போக்கி வேண்டுவதெல்லாம் அருள்வதைக் கூறும் இப்பாடல்கள் சரஸ்வதி பூசை காலத்திலே பாராயணஞ் செய்வததற்கான இனிய தோத்திரங்கள் இவற்றை மெய்புளகித்துக் கண்ணீர் மல்க ஓதி இன்புறுவோம்.

**நன்றி சிவதொண்டன்**

# பொதுக்கட்டமைப்பின்றி முடங்கிக் கிடக்கும் மீளமைப்புப்பணிகள்

# புனர்வாழ்வுக் கழக நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி கவலை

ஆழிப்பேரலை மீளமைப்புக்கான பொதுக்கட்டமைப்பு தடை செய்யப்பட்டுள்ளதால் தமிழர் தாயகத்தில் மூன்றாம் கட்ட மீளமைபபுப் பணிகள் முடங்கி உள்ளதாக தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் றெஜி கவலை தெரிவித்துள்ளார்.

தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கே.பி.றெஜியை நிழல் பத்திரிகை நேர்கண்டது. தமது நிறுவனம் செய்கின்ற பணிகள், அதன்போது எதிர்கொள்ளும் சவால்கள், நிறுவனம் ஈட்டிய பெறுபெறுகள், அவற்றுக்கான பிரதிபலிப்புக்கள் குறித்து அந் நேர்காணலின் போது றெஜி விரிவாக விளக்கினார்.

***கேள்வி:-*** ஆழிப்பேரலைக்குப் பின்னரான மறுவாழ்வுப் பணிகளிற்கென உருவாக்கப்பட்ட பொதுக்கட்டமைப்பு செயலிழந்து விட்டது. அதேவேளையில் வடக்கு கிழக்கு பகுதியில் பாதிக்கப்பட்ட மக்கள் தமக்கான மறுவாழ்வுப் பணிகளுக்கு பெருமளவில் தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தில் தங்கியிருக்கின்றனர். இந்தச் சவாலை எவ்வாறு எதிர்கொள்கின்றீர்கள்?

***பதில்:-*** ஆழிப்பேரலைத் தாககம் நிகழ்ந்து ஒன்பது மாதங்களுக்கு மேலாகிவிட்டது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு மூன்று வகையான பணிகளை நாங்கள் மேற்கொண்டோம் முதலாவது கட்டம் மீட்புப் பணிகள் இரண்டாவது கட்டம் மக்களுக்குத் தற்காலிகக் குடியிருப்புக்களை அமைத்து அவர்களுக்கான நிவாரணங்களை வழங்குவது. மூன்றாவது கட்டம் நிரந்தரமான வாழிடங்களை அமைக்கும் திட்டம்.

இதில் முதலாவது இரண்டாவது கடடங்களைப் பொறுத்தவரை எங்களுக்குப் பிரச்சினை இருக்கவில்லை. ஏனென்றால், உண்மையில் அந்தத் திட்டம் நடைபெற்ற காலப்பகுதியில் சிறிலங்கா அரசாங்கமோ அல்லது சர்வதேச அமைப்புக்களோ அல்லது உள்ளூர் நிறுவனங்களோ எந்தவிதமான வரையறைகளுமின்றி எவ்வளவு விரைவாக வளங்களைப் பெறமுடியுமோ, அவ்வாறு பெற்று மக்களுக்கான வேலைத் திட்டங்களைச் செய்து வந்தன.

சிறிலங்கா அரசாங்கத்தைப் பொறுத்தவரை இக்காலத்தில் **CNO (Center for National Operation** என்ற அமைப்பு இருந்தது. இந்த நிறுவனம் நடவடிக்கைகளை முகாமை செய்ய முடியாமல் நிறுத்தப்பட்டது. பின்னர் தான் சிறிலங்கா அரசு, நாங்கள் 1ஆம், 2ஆம் கட்டங்களை வெற்றிகரமாக முன்னெடுத்துவருகையில் பல்வேறு நிர்வாகக் கட்டமைப்புக்களைக் கொண்டுவந்தது.

அதில் ஒன்று **TAFRAN** இரண்டாவது பாராளுமன்றில் விசேட குழுக்களையமைத்து அதனூடாகப் பல்வேறு கட்டுப்பாடுகளைக் கொண்டுவந்தது. இதற்குப் பின்னர் இலங்கையில் குறிப்பாக வடக்கு-கிழக்குப் பகுதியில் பணிகளை மேற்கொள்வதாயின் அதற்கு விடுதலைப் புலிகளின் ஒத்துழைப்பு தேவையென்று கருதப்பட்டதாலும், சர்வதேச நாடுகளும் இதனை வலியுறுத்தியதாலும் ஒரு பொதுக்கட்டமைப்பு நிவாரணப் பணிகளைச் செய்வதற்குத் தேவையென்று உணரப்பட்டது.

அதுதான் **P-Toms** (சுனாமிக்குப் பின்னான முகாமைத்துவ நடவடிக்கை கட்டமைப்பு) இந்தக் கட்டமைப்பினை விடுதலைப் புலிகள் வரைந்து அரசிடம் கையளித்த பின்னர் தென்னிலங்கையிலுள்ள சிங்களப் பேரினவாதிகள், அரசாங்கக் கட்சிகள்கூட இதனை அங்கீகரிக்கவில்லை.

இந்தக் கட்டமைப்புக்கு கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ளது. இந்தக் கட்டுப்பாட்டால் சர்வதேச உதவிகள் எங்களுக்குக் கிடைக்கவில்லை. எங்களுக்கு மட்டுமல்ல, ஒட்டுமொத்த இலங்கைக்கும் அது பெரிய பாதிப்பைக் கொடுத்தது. ஆனால் அரசாங்கம் தன்னிடமுள்ள **TAFOR** என்ற அமைப்பினூடாக குறிப்பிட்டளவு நிதியைப் பெற்று வருகின்றது.

இதுவரை 1400மில்லியன் டொலர் பெறுமதியான வளங்களை பெற்றுள்ளது.

அரசாங்கக் கட்டமைப்பு தென்னிலங்கைக்குச் சாதகமாக இருக்கலாம். வடக்கு-கிழக்கைப் பொறுததவரை, அரசாங்க நிர்வாகக் கட்டமைப்பு இருக்கிறதே யொழிய அதற்குரிய பணிகளை நிறைவேற்று வதற்கு வளங்கள் ஒன்றும் இல்லை. ஆகையால் அந்தப் பணிகளை ஒட்டுமொத்தமாகச் செய்யக்கூடிய சாத்தியமுமில்லை.

1ஆம் 2ஆம் கட்ட நிவாரணப் பணிகள வடக்கு-கிழக்குப் பகுதிகளிலேயே மிகத் தரமாக மேற்கொள்ளப்பட்டிருந்தன. இதற்காக அரசாங்கத்திடமிருந்து பாராட்டையும் நாங்கள் பெற்றிருக்கின்றோம். ஆனால் கட்டம் 3ஆவது கட்டத்தைப் பொறுத்தவரையில் உண்மையில் வடக்கு- கிழக்குப் பகுதிகள் மிகவும் பின்தங்கித்தான் இருக்கிறது. 6 கிராமங்களில் மட்டும்தான் இந்தப் பணிகள் தொடங்கியுள்ளன. ஆனால் பாதிக்கப்பட்டவையோ 94 கிராமங்கள் அதே வேளையில கட்டம் 1,2பணிகளைப் புனர்வாழ்வுக் கழகம் மற்றும் உள்ளூர் அமைப்புக்கள் மிகத் திறமையாகச் செய்த காரணத்தால் மக்களுக்கு ஒரு எதிர்பார்ப்பும் இருக்கும் அதாவது யார் செய்யாவிட்டாலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகமும் உள்ளூர் அமைப்புக்களும் கட்டாயம் எங்களுக்குச் செய்வார்கள் என்று மக்கள் எதிர்பார்க்கின்றார்கள்.

"அந்த வகையில்தான் எங்களுக்கு மிகப்பெரிய சவால் இருக்கின்றது ஒன்று எங்களுக்கு வர வேண்டிய நிதிகள் வந்து சேரவில்லை. சர்வதேச நிறுவனங்களை எடுத்துக்கொண்டாற் கூட, ஒரு பொதுக் கட்டமைப்பு வந்தாற்தான் பெருமளவு நிதியைத் தர முடியும். அடுத்ததாக **Bi leteral multi leteral** என்ற **Donor Agencies** கூட அப்படியான கட்டமைப்பைத்தான் எதிர்பார்க்கிறார்கள் ஆனால் அப்படியான கட்டமைப்பு இன்னும் இல்லை. இதனால் எங்களுடைய வேலைத்திட்டங்கள் தாமதமாகிப் போய்க்கொண்டிருக்கின்றன.

திருகோணமலை மாவட்டத்தில் கல்லடிக் கிராமம், மட்டக்களப்பு மாவட்டத்தில் பூநொச்சிமுனை, அம்பாறை மாவட்டத்தில் திருக்கோவில், முல்லைத்தீவு மாவட்டத்தில் கள்ளப்பாடு, முல்லைத்தீவு நகரம் போன்ற இடங்களில் எமது பணியை ஆரம்பித்துவிட்டோம்.

தற்போதுள்ள அரசாங்கக் கட்டமைப்பு என்பது தென்னிலங்கைக்கு மிகவும் வசதியாக இருக்கிறது. அங்கு அவர்கள் தங்களுடைய பணிகளை விரைவாகச் செய்துகொண்டு போகிறாாகள். வடக்கு-கிழக்குப் பகுதிகள் உண்மையில் புறக்கணிக்கப் பட்டிருக்கின்றன. இங்கு அரசாங்கக் கட்டமைப்பு இயங்குகின்றது. ஆனால் அதற்கு எந்தவிதமான வளங்களும் இல்லை.

***கேள்வி:-*** தற்போது அவசர காலச்சட்டம் இலங்கையில் அமுலில் இருக்கிறது இந்த நிலமை தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தின் பணிகளை எவ்வாறு பாதிக்கிறது?

***பதில்:-*** உண்மையில் அவசர காலச் சட்டமும், தற்போதைய அரசியல் சூழலும் தமிழர் புனர்வாழ்வுக் கழகத்தை மட்டுமல்ல தமிழ் பேசும் மக்களின் ஒட்டுமொத்தமான நடவடிக்கைகளையும் நகர்வுகளையும், வடக்கு-கிழக்குப் பகுதியில் நடைபெறும் சமூகப் பொருளாதார நடவடிக்கைகளையும் மிகப் பெரியளவில் பாதித்திருக்கின்றது.

சர்வதேசத்தை பொறுத்தமட்டில் அதன் பார்வை இந்த விடயத்தில் குறைவாக இருக்கின்றதோ தெரியாது.

ஆனால் எமது சமூகத்தில் கீழ் மட்டத்தில் செய்யப்படும் வேலைகளில் மிகப் பெரிய பாதிப்பை ஏற்படுத்தியுள்ளது.

குறிப்பாக எமது வேலைத் தளங்களுக்கு பொருட்களையோ, பணியாளர்களையோ நகர்த்தும் போது, வேலைகளை விரிவாக்கும் போது அவசரகாலச் சட்டத்தைப் பயன்படுத்தி படைத்தரப்பின் நடவடிக்கை மிக இறுக்கமாகவே காணப்படுகின்றது.

(தொடரும்)

# சச்சின் 14

## மீள் பார்வை

என். சொக்கன்

## ஒரு புயலின் கதை

திலீப் வெங்சர்காருக்கு சச்சினை அணியில் சேர்த்துக் கொள்வதில் பூரண சம்மதம் தான் ஆனாலும் அவரை ஏதோ ஒரு தயக்கம் தடுத்துக் கொண்டிருந்தது. உள்ளூர்ப் போட்டிகளில் நன்றாக விளையாடுவது சரி (பள்ளிப் போட்டிகளில் அப்போது சச்சினின் சராசரி -மூச்சைப் பிடித்துக் கொள்ளுங்கள் ஆம் 1035 தான் ) ஆனால் இந்தப் பையனால் தரமான பவுலர்களை எதிர்கொண்டு சமாளித்து ஆடுவானா என்கிற ஒரு மெலிதான சந்தேகம் அவரை உறுத்தியது அதையும் சோதித்துப் பார்த்துவிட ஒரு வாய்ப்பு வந்தது.



அப்போது இந்தியா -நியூஸிலாந்து அணிகளுக்கு இடையிலான டெஸ்ட் போட்டி மும்பையில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. அதற்காக இந்திய அணி மும்பையில் பயிற்சி கேம்ப் அமைத்திருக்க அங்கே வருமாறு சச்சினுக்கு கேப்ரன் வெங்கசர்கார் அழைப்பு அனுப்பினார்

இச் செய்தியைக் கேட்டபோது, சச்சினுக்கு உற்சாகத்தில் எதுவுமே தெரியவில்லை. அண்ணன் அஜித் டென்டில்காருடோ இந்திய அணியினர் பயிற்சி எடுத்துக்கொண்டிருந்த சி.சி.ஐ. மைதானத்திற்குச் சென்ற போது வழி எங்கும் சச்சினின் வாய் ஓயவே இல்லை. ஆர்வாமாக ஒரு கேள்வி கேட்பதும் அவனே அதற்கு சமாதாணமாக ஒரு பதில் சொல்லவதுமாக மிகுந்த பரவசத்தில் இருந்தான் அவன். இந்திய அணியினருக்கு முன் விளையாடுகிற தங்கமான வாய்ப்பை தன்னால் சரியாக பயன்படுத்தி கொள்ள முடியுமா என்கிற சிறிய பயம் அவனுக்குள் இருப்பதை க்வனித்த அஜித் டெண்டுல்கர், அவனது தோளில் தட்டி உற்சா கம் அளித்தார். எதற்கும் கவலைப்படாதே சச்சின் உன் இயற்கையான ஆட்டத்தை எப்போதும் போல் ஆடு. அது போதும் என்றார்.

சச்சினுக்கு அன்று நெட்களில் பந்துவீசியது உலகின் மிகச் சிறந்த பவுலர்களில் ஒருவரான கபில்தேவ். சச்சினின் குள்ளமான உருவத்தையும் குழந்தை முகத்தையும் பார்த்த அவன் சற்றே அருகில் இருந்தே ஓடி வந்து மிக வேகத்திலேயே வீசினார். அந்த பந்துகளில் சச்சின் சமாளித்து விளையாடுகிறான் என்ற தெரிந்த பிறகு அவர் தனது வழக்கமான வேகத்தில் பந்துகளை வீசிச் சச்சினை திணறடிக்க முயன்றார். பதற்றமாய் இருந்த போதும் சச்சினால் கபிலின் உயர் தர பந்து வீச்சிற்கு தடுமாறாமல் விளையாட முடிந்தது.

அன்று இரவு முழுக்க சச்சினுக்கு தூக்கம் வரவில்லை. எப்படி வரும்? சச்சி னைப் போன்ற ஏராளமான இந்திய இளைஞர்களில் ,இலட்சிய பிம்பமாக ஊக்க சக்தியாக இருந்த கபில்தேவின் 15 பந்துகளை விளையாடி இருக்கிறானே அவன் அந்த பந்துகள் ஒவ்வொன்றும் அவனது நினைப்பில் மீண்டும் மீண்டும் சுற்றிச் சூழல கம்பீரமானதொரு பெருமை உணர்வு அவனை முழுமையாக ஆக்கிரமித்திருந்தது.பலவருடங்களுக்கு பிறகும் சச்சின் சொல்வது போல் அந்த 15 பந்துகளும் படம்பிடித்ததுபோல் இப்போதும் என் ஞாபகத்தில் தெள்ளத்தெளிவாக இருக்கின்றன.



கபிலின் பந்து வீச்சை சச்சின் திணறாமல் விளையாடியது அவனது திறமைக்கு போதுமான சாட்சியம் என்று வெங்சர்காருக்குத் தோன்றியது. சச்சினை மும்பை ரஞ்சி டிராபி அணியில் சேர்த்துக்கொள்வதற்கு அவர் முழு மனதோடு சம்மதித்து விட்டார்.

1988டிசம்பரில் குஜராத் அணிக்கு எதிராக சச்சின் தனது முதல் ரஞ்சின் டிராவி போட்டியில் விளையாடிய போது அவன் வயது 15 அரை தான்.மிக இளம் வயதில் மும்பை அணிக் காக விளையாடும் வீரன் என்னும் சாதனைக் குறிப் போடுதான் சச்சின் அந்த போட்டியினுள் நுழைந் தான்!

பள்ளி மற்றும் க்ளப் நிலைப்போட்டிகளின் அபாரமாக விளையாடிய மழலை மேதை சச்சின் முதல் தரப்போட்டிகளின் ஜொலிக்கிறானா? சுருள்கிறானா ? என்று மும்பையின் கிரிக்கெற் ஆர்வலர்கள் பலரும் பூதக்கண்ணாடியோடு போட்டி நடக்கிற மைதானத்தில் வந்து குவிந்தார்கள்.

மும்பை போன்றதொரு வலுவான கிரிக்கெற் அணிக்கும் சும்மாக்காச்சிக்கும் ரஞ்சி ஆடுகிற குஜராத் அணிக்கும் இடையே நடக்கிற உப்புமா போட்டிக்கு அத்தனை கூட்டம் சேர்ந் தது என்றால் அதற்கு முக்கிய காரணம் சச்சின தான்.திறமையான ஆள் தான் ஆனால் ரஞ்சி லெவலில் சின்னப்பையன் என்னதான் பண்ணுகிறான் பார்ப்போமே என்கிற குறுகுறுப்பிலேயே பத்திரிகைக்ளும் பொது ஜனங்களும் அந்த மேற்சைக் கவனித்தார் கள். சச்சினின் குருநாதர் அஸ்ரேகர் கவாஸ்கர் ராஜ்சின் துங்கர்புர் போன்ற பெருந்தலைகளும் தேர்வுக்குழு உறுப்பினர்கள் பலரும் சச்சின் ஆடுவதைப் ப்ராக்க வந்திருந்தார்கள்.

சச்சினைப் பொறுத்தவரை அது வழக்கமான இன்னொரு மேற்ச் அவ்வளவே தன்னைச் சுற்றி உண்டாகியிருக்கும் அதிரப்பரபரப்பில் பெரிதும் கவனம் சிதறாமல் ஆட்டத்தில் மும் முரமாகியிருந்தான் அவன். குஜராத் டாஸ் வென்று பேட்டிங் தேர்ந் தெடுத்தது சுமாராக விளையாடிய அவர்கள் 140ற்கு ஆட்டமிழக்க மும்பை அணி முதல் நாள் ஆட்ட இறுதியில் ஒரு விக்கெற் இழப்பிற்கு 95 ரன்கள் எடுத்திருந்தது. பாந்த்திராவில் சச்சினின் வீட்டைச் சுற்றியிருந்த அவனுடைய நண்பர் மற்றும் விசிறிக்கூட்டமொன்று சச்சினின் பேட்டிங்கைப் பார்ப்பதற்கு என்று ஆவலோடு வந்திருந்தது. மாலை வரை அவன் பேட் செய்கிற வாய்ப்பு வராததால் ஏமாற்றத்தோடு திரும்பினார்கள் அவர்கள்.

(தொடரும்)

# சந்திரிகா-மஹிந்த 4 மணி நேரம் சந்திப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சுதந்திரக்கட்சி வேட்பாளரான மஹிந்த ராஜபக்ஷ கடந்த சனிக்கிழமை சந்தித்தார்.

சந்திரிகாவின் இல்லத்தில் இரவு 8 மணிமுதல் நள்ளிரவு 12 மணி வரை சுமார் 4 மணிநேரம் இச்சந்திப்பு நீடித்தது.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் பொதுச் செயலாளர் மைத்திரிபால சிறிசேன பிரதமரின் துணைவியார் ஷிரந்தி ராஜபக்ஷ ஆகியோரும் இச்சந்திப்பில் கலந்துகொண்டதாக ஜனாதிபதி செயலகவட்டாரங்கள் தெரிவித்தன.

ஜனாதிபதி நாடு திரும்பிய பின்னர் இச் சந்திப்பினை நடத்தியுள்ளார்.

மஹிந்த ராஜபக்ஷவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் ஜாதிக ஹெல உறுமய மற்றும் ஜே.வி.பியுடன் மஹிந்த ராஜபக்ஷ ஏற்படுத்திக் கொண்டுள்ள உடன்படிக்கைகள் ஆகியவை குறித்தும் அச் சந்திப்பில் விரிவாக விவாதிக்கப் பட்டுள்ளது.

சுதந்திரக் கட்சியின் தேர்தல் அறிக்கை குறித்தும் விவாதிக்கப்பட்டதுடன் சந்திரிகாவின் அனுமதியைப் பெற்ற பின்னர் இவ்வாரம் தேர்தல் அறிக்கையை வெளியிட தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் அந்த தகவல்கள் மேலும் தெரிவித்தன. (ச-4)

# ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு விலகமாட்டேன் -சரத்அமுனுகம

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு ஒரு போதும் தான் வெளியேறப்போவதில்லை என நிதி அமைச்சர் சரத் அமுனுகம தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியில் இருந்து நிதி அமைச்சர்சரத் அமுனுகம விலகி ஐக்கிய தேசியக் கட்சியில் இணையவுள்ளதாக ஊடகங்களில் செய்திகள் வெளியாகியிருந்தன.

இந்நிலையில் கல்கொடவில வில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் உரையாற்றிய சரத் அமுனுகம இவ் வதந்திகளுக்கு எவ்வித உண்மையும் இல்லை என்றும் தான் ஒருபோதும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியை விட்டு வெளியேறப் போவதில்லை என்றும் தெரிவித்தார்.

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சி இந் நாட்டிற்கு பெரும் சேவைகளை ஆற்றியுள்ளது.

அதேபோல இந்நாட்டின் ஜனநாயகத்தையும் பாதுகாத்துள்ளது என்றும் சரத் அமுனுகம தெரிவித்தார். (ச-4)

# தேர்தல் வன்முறைகள் 53ஆக அதிகரிப்பு

(கொழும்பு)

ஜனாதிபதி தேர்தலுக்கான வேட்பு மனுத்தாக்கல் திகதி அறிவிக்கப்பட்டதிலிருந்து இதுவரை 53 தேர்தல் வன்முறைகள் இடம்பெற்றுள்ளதாக தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது.

இதன் பிரகாரம் 21 முறைப்பாடுகளை ஐக்கியதேசியக் கட்சியும் 15முறைப்பாடுகளை பொதுஜன ஐக்கிய முன்னணியும் 17முறைப்பாடுகளை ஏனைய கட்சிகளும் செய்துள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

மேற்படி தேர்தல் வன்முறைகள் தொடர்பாக தேர்தல் செயலகம் நடவடிக்கை எடுத்துவருவதோடு நாடு முழுவதிலும் உள்ள தேர்தல் தொடர்பான சுவரொட்டிகள் மற்றும் கட்அவுட்கள் என்பனவற்றினை அகற்றுவதற்கான வேலைத்திட்டம் ஒன்றினையும் அமுல்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

இதற்கென நாட்டின் அனைத்து பொலிஸ் பிரிவுகளிலும் விசேட பொலிஸ் குழுக்களும் நியமிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தேர்தல் செயலகம் அறிவித்துள்ளது. கிழக்கு மாகாணம் உட்பட அனைத்து பிரதேசங்களிலும் தேர்தல் சுவரொட்டிகள் ஒட்டப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (த-9)

# இ.தொ.க அமைச்சர்கள் கடிதம் சமர்ப்பிப்பு

(கொழும்பு)

தோட்ட உட்கட்டமைப்பு, சமூக மேம்பாட்டு அமைச்சர் முத்துசிவலிங்கம் மற்றும் பிரதி அமைச்சர் எம்.எஸ். செல்லச்சாமி ஆகியோர் நேற்று தமது பதவி விலகும் கடிதங்களை ஜனாதிபதி செயலகத்தில் கையளித்தனர்.

பதவி விலகிய அமைச்சரும் பிரதி அமைச்சரும் தமது பதவி விலகல் குறித்து ஜனாதிபதி சந்திரிகாவுக்கு விளக்கவிருந்த போதிலும் ஜனாதிபதி சந்திப்பு எதுவும் இடம்பெறவில்லை எனத் தெரிவிக்கப்பட்டது.

ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியின் வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு அளிப்பதாக இலங்கைத் தொழிலாளர் காங்கிரஸ் முடிவு எடுத்தமையை அடுத்து இப்பதவி விலகல் தீர்மானம் மேற் கொள்ளப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-4)

# முள்ளியவளை இளைஞன் இத்தாலியில் சுட்டுக்கொலை

(இத்தாலி)

இத்தாலியில் தனது வீட்டில் பணிபுரிந்த தமிழ் இளைஞனையும் தனது மனைவியையும் இத்தாலியர் ஒருவர் சுட்டுக்கொன்றுள்ளார்.




இத்தாலியின் ஜெனோவா நகரில் கடந்த வியாழக்கிழமை காலை 6 மணிக்குஇச் சம்பவம் இடம்பெற்றது. கொல்லப்பட்ட தமிழ் இளைஞான முள்ளியவளையைச் சேர்ந்த சிவஞானம் பிரதீபன் (வயது 27) அந்த வீட்டில் பணியாளராக இருந்து வந்துள்ளார்.

வீட்டின் மேற்தளத்தில் தங்கியிருந்த அவர் காலை 6 மணியளவில் கீழ்த்தளத்தில் துப்பாக்கிச் சத்தம் கேட்டதையடுத்து இறங்கிவந்துள்ளார்.


அப்போது அவரை நோக்கி வீட்டின் உரிமையாளர் துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளார். இதில் தோள்பட்டையில் துப்பாக்கிக்குண்டுகள் பாய்ந்த நிலையில் தனது அறைக்குச் சென்று பதுங்கியுள்ளார். அங்கேயும் தொடர்ந்து வந்த கொலையாளி மீண்டும் இரு முறை சிவஞானம் பிரதீபனை நோக்கி சுட்டுள்ளார்.

இந்நிலையில் அவர் அவ்விடத்திலேயே உயிரிழந்துள்ளார்.

முன்னதாகத் தனது மனைவியையும் அக்கொலையாளி கீழ்த் தளத்தில் சுட்டுக்கொன்றுள்ளார். சம்பவ இடத்திற்குச் சென்றுள்ள பொலிஸார் கொலையாளியை கைது செய்து மனநோய் வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கனர். (அ-4)




# குழந்தைப் பழக்கங்கள்



குழந்தைகளிடம் காணப்படும் பல பழக்கவழக்கங்களை தெரிந்துகொண்டு, குழந்தையின் நலனைப் பாதுகாருங்கள்.

### நகம் கடித்தல்

இது சாதாரண பழக்கங்களில் ஒன்றாகும். இதைப் பற்றிக் கவலைகொள்ள வேண்டியதில்லை. குழந்தைகள் விரல் நகத்தைக் கடிப்பதால் நகத்திற்கும், விரலுக்கும் இடையே இருக்கும அழுக்கெல்லாம் ஜீரணப் பாதையில் நுழைந்து வயிற்றுக் கோளாறுகளை ஏற்படச் செய்யலாம். இந்த உண்மையை எடுத்துச் சொல்லி, அபபழக்கத்தை மறக்கச் செய்தல வேண்டும். அவ்வப்போது குழந்தைகளின் நகத்தை வெட்டி விடுதல் வேண்டும்.

### விரல் சூப்பும் பழக்கம்

இதுவும் பரவலாகக் காணப்படும் பழக்கம் தான. சில குழந்தைகள் பத்து, பன்னிரெண்டு வயது வரையிலும் விரல் சூப்புவார்கள்.

விரல் சூப்பும் பழக்கமிருக்கும் குழந்தையை மிரட்டியோ, அல்லது அடித்தோ அப்பழக்கத்திலிருந்து விடுபடச் செய்யக்கூடாது. தொடர்ந்து விரல் சூப்பாது இருந்தால் ஏதேனும் சிறு பரிசுப் பொருள் தருவதாகக் கூறி விரல் சூப்பும் பழக்கத்தை மறக்கச்செய்தல் வேணடும். சூப்பும் விரலில் கசப்பான எண்ணெயைத் தடவி, அந்தப் பழக்கத்திலிருந்து விடுபடச் செய்யலாம். தொடர்ந்து குழந்தைகள விரல் சூப்பினால், குழந்தைகளின் பல் வரிசை சீராக இருக்காது. முன்பல் தூக்கிக்கொண்டு முக அழகையே கெடுத்துவிட வாய்ப்புண்டு.

### மண் சாப்பிடும் பழக்கம்

சில குழந்தைகள் மண், சோக்குக்கட்டி, பெயின்ற,



செங்கல் தூள் போன்ற உண்ணத்தகாதவற்றை தின்னும் பழக்கமுள்ளவர்களாக இருப்பர். இப்பழக்கம் மூளை வளர்ச்சி குன்றிய குழந்தைகளிடமும், ஊட்டச்சத்து குறைவாக இருக்கக்கூடிய குழந்தைகளிடையேயும் இருக்கக்கூடும்.

### எதையும் வாயில் போடுதல்

கீழே கிடப்பவற்றை குழந்தைகள் எடுத்து வாயில வைக்க முயற்சி செய்வர். இப்பழக்கம் 2 வயது வரை இருக்கலாம்.

அதற்குப் பிறகும் இப்பழக்கம் தொடர்ந்தால், குழந்தைகளுக்குப் பெற்றோரின் அரவணைப்பும், அன்பும், பராமரிப்பும் குறைவாக உள்ளதாக பொருள்.

வாழ்க்கையில் வறுமைக் கோட்டுக்குக் கீழுள்ள குழநதைகளிடையே இப்பழக்கம் அதிகமிருக்கிறது. இப்பழக்கத்தால் வயிற்று வலி, இரத்தச் சோகை போன்றவை ஏற்படலாம். குடற் புழுக்களும் குடலினுள் வளர்ந்து குழந்தையின் வளர்ச்சியினைக் கூட குலைத்து விட வாய்ப்புக்கள் உண்டு.

### படுக்கையில் சிறுநீர் கழித்தல்

குழந்தைகளிடம் தங்களை அறியாமலேயே தூக்கத்தில் சிறுநீர் கழிக்கும் பழக்கம் இருப்பதைப் பற்றிச் சாதாரணமாகக் கேள்விப்பட்டிருக்கிறோம்.

4 வயது குழந்தைகளிடையே 10 முதல் 20 சதவீதமும், 6 வயது குழந்தைகளிடையே 10சதவீதமும், 12 வயது குழந்தைகளிடத்தில் 3 சதவீதமும் 18 வயதானவர்களிடத்தில் ஒரு சதவீதமும் இப்பழக்கம் இருக்கிறது.

இப்பழக்கம், சாதாரணமாக ஒன்றரை வயது முதல் இரணடரை வயது வரை இருக்கலாம். அதற்குப பின்னரும் ஒரு மாத்திற்கு மேலாக இருந்தால் அதற்கான காரணத்தை அறிந்து தகுந்த சிகிச்சை அளித்தல் அவசியம். சிறுநீர்ப்பாதை நோய்கள், ஒன்றிலிருநது இரண்டு சதவீதம் வரை இப்பழக்கத்திற்கு காரணமாய் இருக்கக்கூடும். மரபு வழிக் காரணங்கள் பெண் குழந்தைகளிடையே அதிகமாகக காணப்படும்.

இப்பழக்கத்தை ஒரு நோயென்று சொல்லுவதைவிடச் சிறுநர்ப் பையினை அடக்கியாளும் முறையில் உள்ள சாதாரண மாறுபாடே காரணம் எனலாம். இப்பழக்கமுள்ள குழந்தைகளின் பெற்றோர் மிகுந்த கவலைப்படுவார்கள். இப்பழக்கத்தினைச சரி செய்ய பல்வேறு சிகிச்சை முறைகள உள்ளன. அவை,

*குழந்தைகளுக்குப் புத்திமதிகள்
*சிறுநீர்ப்பை பயிற்சிகள்
*மருந்துகள்
*படுக்கையில் சிறுநீா போதலைக் கட்டுப்படுத்தும் கூக்குரல் மணிகள்.

இப்பழக்கமுள்ள குழந்தைகள் ஆறு வயத்திற்குப் பின்னா் ஒவ்வொரு வருடமும் 15 சதவீதம் பேர் குணமடைவா எனபதைப் பெற்றோர் அறிதல் அவசியம்.

புத்திமதிகளால் 24 சதவீதமும், சிறுநர்ப்பை பயிற்சிகளால் ஒரு சதவீதமும், படுக்கையில் சிறுநீா போதலைக் கட்டுப்படுத்தும் கூக்குரல் மணியால் 70 வீதமும் மருந்துகளால் 25 சதவீதமும் குணமாகும்.

### புத்திமதிகள்

குழந்தை தூங்குவதற்கு மூன்று மணி நேரத்திற்கு முன்பிருந்தே திரவ ஆகாரம் கொடுக்கக் கூடாது. தூங்கப்போகும் போது சிறுநீர் கழித்து விட்டுப் படுக்கப் போகுமாறு கூற வேண்டும். பெற்றோர் தாங்கள் தூங்கப் போகும் முன்னரும் குழந்தையினை எழுப்பி சிறுநீா கழிக்கச் சொல்ல வேண்டும். தொடர்ந்து பல இரவுகள் சிறுநீா கழிக்காது இருந்தால் குழந்தைக்கு ஏதேனும் சிறு பரிசுகளைத் தருதல், அவர்களைப் புகழநது பாராட்ட வேண்டும். தொடா்ந்து சிறுநீா கழிக்கும் குழந்தையின் துணிகளை அவாகளே துவைக்கச் செய்தல் வேண்டும். ஆனால், சிறுநீா கழித்துவிட்டதற்காக கடுமையான தணடனையைக் கொடுக்கக் கூடாது.

(அடுத்த வாரம் தொடரும்...)

## மூளை வளர்ச்சி அடைய வேண்டுமா?



அசைவம் சாப்பிடுபவர்கள் விரும்பிச் சாப்பிடும் உணவு மீன். இதய நோயை தவிர்க்கக்கூடியது. மீனில் ஏமேகா – 3 என்ற ஒருவகைக் கொழுப்புகள வளர்சிதை மாற்றத்தின் போது விரிவான விளைவுகளை ஏற்படுத்துகின்றன.

மீன் எண்ணெயில் கொலஸ்ட்ரோலும டிரைகிளிசரைடுகளும் குறைநத அளவில் உள்ளன. மீன் எண்ணெய் இரத்தக் கட்டி உண்டாவதை தடுக் கிறது. இரத்த குழாய்களில் திசுக்கள் இறுகிப் போவதை தடுக் கிறது. விற்றமின் சத்தும் அதிகமாக உள்ளது.

மூளை வளர்ச்சிக்கு ஏமேகா கொழுப்பு ஏற்றது என்று அறிவியல் அறிஞர்கள் நடத்திய ஆய்வுகள் கூறுகின்றன.

ஆண்களின் சிரிப்பு பெண்களை விட அதிக கனமானது. மேலும் பெண்களை விட ஆண்கள் அதிக நேரம் சிரித்துக்கொண்டிருக்கின்றனா்.

மனித உடலில் வினாடிக்கு 15 மில்லியன் இரத்தச் சிவப்பு அனுக்கள் உற்பத்தியாகின்றன. அதேசமயம் அழியவும் செய்கின்றன.

மனித உடலிலுள்ள பஞ்ச புலனுறுப்புக்களில் கடைசியாகச் செயலிழப்பது காது.

## சமைத்துச் சுவைப்போம்

### மரக்கறி உப்புமா

**தேவையான பொருட்கள்:–**



| | |
|---|---|
| ரவை | – 2கப் |
| கரட் | – 1(நறுக்கவும்) |
| பீன்ஸ் | – 4 (நறுக்கவும்) |
| பெரிய வெங்காயம் | – 1 (நறுக்கவும்) |
| இஞ்சி | – ஒரு துண்டு |
| பச்சை மிளகாய் | – 4 |
| கறிவேப்பிலை | – தேவைக்கு |
| கடுகு | – 1/4 தேக்கரண்டி |
| உப்பு | – தேவைக்கேற்ப |
| உ.பருப்பு | – 1 மேசைக்கரண்டி |
| எண்ணெய் | – 2 மேசைக்கரண்டி |
| தண்ணீர் | – 2 கப் |

**செய்முறை :–**

இஞ்சி, மிளகாய் போன்றவைகளை நறுக்கி வைக்கவும். ரவையை வறுக்கவும். எண்ணெய்யை சூடாக்கி கடுகு தாளித்து விட்டு, உளுத்தம் பருப்பைக் கொட்டி வறுக்கவும். அதில் இஞ்சி, மிளகாய், கறிவேப்பிலை, காய்கறி போனறவைகளைக் கொட்டிக் கிளறி உப்பும தண்ணீரும் சேருங்கள. தண்ணீர் கொதிக்கும் போது ரவையைத் தூவி கிளறி இரண்டு நிமிடம் மூடி வையுங்கள். பின்பு மூடியைத் திறந்து கிளறி, வெந்ததும் இறக்குங்கள். மரக்கறி உப்புமா தயார்.

## துளசியின் மகிமை



சரித்திர காலத்தில் இருந்தே புனிதத்திற்கும் மகத்துவத்திற்கும் எடுத்துக்காட்டாக இருப்பது துளசி. இந்துக்கள இதனை தெய்வத் தன்மை கொணடதாக கருதுகிறார்கள். ஆனால் மத நம்பிக்கைகளுக்கு அப்பாற்பட்டதாக உலகம் முழுக்க உள்ள மனிதர்களால் மருத்துவ மகிமை கொண்டதாக துளசி அறியப்படுகிறது.

துளசி எந்த மண்ணில் விளைகிறதோ அந்த மண்ணுக்கும் மருத்துவ குணம் உணடு. அநத மண்ணை உடலில் ப,சி அரை மணி நேரம கழித்து கழுவினால் சருமத்தில் இருக்கும சொறி, அரிப்பு போன்றவை நங்கும். சருமமும் அதிக மென்மையாகும்.

துளசி சாதாரணமாகவே நவம்பர், டிசம்பர் மாதங்களில் ப,க்கும். அது ப,க்கத் தொடங்கிவிட்டாலே அந்தப் பகுத'யில் இருக்கும் நோய் அனுக்கள் நசிந்து போய்விடும். துளசியில் ஒரு வித எண்ணெய் இருக்கிறது. அந்த எண்ணெய் உடலில் நோய்களை உருவாக்கும் பக்டீரியாக்களை அழிக்கும ஆற்றல் கொண்டது.

துளசியை எப்போதுமே நிழலில்தான் வளர்க்க வேண்டும். நிழலில் வளரும் துளசியிலே அதிக மருத்துவ குணம் உண்டு. கறுப்பு துளசிக்கு மலேரியா நோயை உருவாக்கும் அனுக்களை அழிக்கும் சக்தி அதிகமாக இருக்கிறது.

தினமும் காலையில் வெறும வயிற்றில் சில துளசி இலைகளை மென்று தின்று வந்தால் அவர்களின் நினைவாற்றல் அதிகரிக்கும். துளசி இரத்த சுத்திக்கும் ஏற்றது. சுற்றுப்புறத்தில் உள்ள மாசுக்களையும் துளசி போக்குகிறது.

தினமும் அதிகாலையில் ஐந்து துளசி இலைகளை மென்று தின்னும் பழக்கம் இருந்தால் அவர்களது உடலில் கொழுப்புச சத்து சேராது என்பது குறிப்பிடத்தக்கது. இரத்த அழுத்தமும கட்டுப்பாட்டுக்குள் இருக்கும்.

துளசியை சேர்த்து கொதிக்கவைத்த நரில் சிறிதளவு தேன் சோத்து குடித்தால் தொண்டையில் ஏற்படும் நோய்கள் கட்டுபபடும. தேயிலைத் தூள், சர்க்கரை, பால், துளசிஇலை போனறவைகளைச் சேர்ந்து ா தயாரித்துப் பருகினால் காய்ச்சல் குணமாகும். குளிர்காலத்தில் இதைப் பருகனால் உடலுக்கு உற்சாகம் கிடைக்கும்.

துளசி சேர்த்து கொதிக்க வைதத தண்ணா்ல் உப்புக் கலந்து வாய் கொப்பளித்தால் சொத்தைப்பல் குணமாவது மட்டுமின்றி பற்களும் ஈறுகளும் பலமாகும்.

பத்து துளசி இலைகளும் பதினைந்து மிளகும் சேர்த்து இடித்து தேனில் குழைத்து சாப்பட்டால் காய்ச்சல் குணமாகும். கட்னியில் கல் இருப்பவர்கள் துளசிச் சாறில் தேன் கலந்து சாப்பிட வேண்டும். சாதாரணமான ப,ச்சிகள் ஏதாவது கடித்தால் அந்த இடத்தில் துளசிச்சாறு தேயுங்கள் விஷத்தன்மை உடனே குறைந்துவிடும்.

## தெற்காசிய நாடுகளை உலுக்கிய பூகம்ப அனர்த்தம்:

# உயிரிழப்பு 50,000 ஆக உயர்வு சுமார் 40 இலட்சம் பேர் பாதிப்பு

* மீட்புப் பணிகள் மந்தகதியில் * கொள்ளைகளில் ஈடுபடும் மக்கள் * தொற்றுநோய் பரவும் அபாயம்






(இஸ்லாமாபாத்)

**தெற்காசிய நாடுகளில் ஏற்பட்ட பூகம்பத்திற்கு உயிரிழந்தவர்களின் எண்ணிக்கை 50 ஆயிரமாக உயர்ந்துள்ளது.**

**பாதிக்கப்பட்ட பகுதிகள் அனைத்தும் மலைப் பிரதேசத்தில் அமைந்துள்ளதால் மீட்புக் குழுவினர் அங்கு செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளது. அரசு உதவி கிடைக்காததால் கோபமடைந்த மக்கள் கொள்ளைகளில் ஈடுபட்டு வருகின்றனர். இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்களின் உடல்களை அகற்றாததால் தொற்றுநோய் பரவும் அபாயமும் ஏற்பட்டுள்ளதாகத் தெரியவருகிறது.**

பாகிஸ்தானில் கடந்த 8ஆம் திகதி காலை மிகப்பெரிய அளவில் பூகம்பம் ஏற்பட்டது. இது 7.4 என ரிக்டர் அளவில் பதிவானது. இதனால் பாகிஸ்தானில் வட மேற்கு எல்லைப்பகுதி மற்றும் பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீர் பகுதிகள் கடுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளன.

### மீட்புப் பணிகள் தாமதம்

பாக். ஆக்கிரமிப்பு காஷ்மீரின் தலைநகரான முசாபராபாத், பாலாகோட் உள்ளிட்ட பல நகரங்களில் அனைத்துக் கட்டடங்களும் இடிந்து விழுந்து விட்டன. நிலச்சரிவால் ஏராளமான கிராமங்கள் மண்ணில் புதைந்துள்ளன. அந்தப் பகுதிகளுக்கு இன்னும் மீட்புக் குழுவினர் செல்லவில்லை.

பாக்.ஆக்கிரமிப்புக் காஷ்மீருக்குச் செல்லும் அனைத்துச் சாலைகளும் நிலச்சரிவால் சீர்குலைந்துவிட்டதால் பாக். விமானப்படையில் இருந்த அனைத்து ஹெலிகப்டர்களும் மீட்புப் பணிக்கு அனுப்பப்பட்டுவிட்டன. அந்தக் ஹெலிகப்டர்களில் சென்ற இராணுவ வீரர்கள் பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள மக்களுக்கு உணவுப் பொருட்கள் மற்றும் மருந்துப் பொருட்களை போட்டு வருகின்றனர்.

இதுதவிர, ஆப்கானிஸ்தானில் இருந்த தனது 8 ஹெலிகப்டர்களை அமெரிக்கா மீட்புப் பணிகளுக்குக் கொடுத்து உதவியுள்ளது. மேலும் பல ஹெலிகப்டர்கள் தேவை என உலக நாடுகளிடம் முஷாரப் கோரிக்கை விடுத்துள்ளார்.

### கொள்ளை

முசாபராபாத் நகரில் பூகம்பத்தால் வீடுகள், உறவினர்களை இழந்த மக்கள் அரசு உதவி கிடைக்காததால் கடும் கோபத்தில் உள்ளனர். கடைகள், கேட்பாரற்றுக் கிடக்கும் வீடுகளில் புகுந்து மக்கள் பொருட்களை திருடத் தொடங்கியுள்ளனர். பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு போர்வைகள், கூடாரங்கள் மற்றும் முக்கிய பொருட்களை ஏற்றிச்சென்ற இராணுவ வாகனத்தைத் தடுத்து நிறுத்தி அப்பகுதி மக்கள் பொருட்களை கொள்ளையடித்துள்ளனர்.

பூகம்பத்தால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கடும் குளிர் வீசுகிறது. கடந்த இரண்டு நாட்களாக இரவு நேரத்தில் மக்கள் வெட்ட வெளியில் தான் படுத்து உறங்கி வருகின்றனர். அரசு அவர்களுக்கு தற்காலிக குடியிருப்பு ஏற்படுத்தித் தரவில்லை என்ற கோபத்துடனும் உள்ளனர்.

பாக். ஆக்கிரமிப்பு பகுதியில் மட்டும் 30 ஆயிரம் பேர் இறந்திருக்கலாம் என்று அஞ்சப்படுகிறது. இங்கு மீட்புக் குழுவினர் செல்வதில் சிரமம் ஏற்பட்டுள்ளதால் இடிபாடுகளில் சிக்கி இறந்தவர்களின் உடல்களை அகற்றுவதில் தாமதம் ஏற்பட்டுள்ளது. சிலரது உடல்களை உளளூர் மக்கள் புதைத்து வருகின்றனர்.

மற்றவர்களின் உடல்கள் உள்ளே சிக்கியிருப்பதால் இதன் மூலம் தொற்று நோய் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளது.

### இறந்தவர்கள் எத்தனை பேர்?

பாகிஸ்தானில் பூகம்பத்தால் இறந்தவர்களின் எண்ணிக்கை 40ஆயிரத்தைத் தாண்டிவிட்டது என உளளூர் தனியார் 'ரீ.வி' செய்திகளை ஒளிபரப்பி வருகிறது.

ஆனால் பாகிஸ்தான் அரசு இறந்தவர்களின் எண்ணிக்கை 20ஆயிரம் மட்டுமே என்று கூறிவருகிறது. யுனிசெவ் நிறுவனமும் 40 ஆயிரம் பேர் இறந்திருக்கலாம் என்று தெரிவித்துள்ளது. பாதிக்கப்பட்ட பகுதிகளில் குழந்தைகளின் நலன் குறித்து யுனிசெவ் கவலை தெரிவித்துள்ளது.

பாதிக்கப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த 1இலட்சத்து 20ஆயிரம் பேருக்கு உடனடியாக தற்காலிகக் குடியிருப்புகள், குடிநீர், உணவு மற்றும் மருந்துப்பொருட்கள் வழங்கப்படவேண்டும். இதற்கான பணிகளை அதிபர் முஷாரப்பும் பிரதமர் சௌகத் அஜீஸும் தீவிரப்படுத்தியுள்ளனர்.

'மருத்துவ உதவி அளிக்கவேண்டும் இதற்காக தற்காலிக மருத்துவமனைகளை ஏற்படுத்த வேண்டும்' என்று சர்வதேச தன்னார்வத் தொண்டு நிறுவனங்கள் கூறியுள்ளன. பாகிஸ்தானில் பூகம்பத்தினால் 40 இலட்சம் பேர் வீடுகளை இழந்திருக்கலாம் என்று இந்த அமைப்புக்கள் கூறியுள்ளன. 'பாலாகோட்' ஏன்ற நகரத்தில் பள்ளிகள் இடிந்து விழுந்ததில் நூற்றுக்கணக்கான மாணவர்கள் இறந்துவிட்டனர். ஏராளமானோர் இடிபாடுகளில் சிக்கியுள்ளனர். இடிபாடுகளை அகற்றி அவர்களை மீட்கும்பணி நடந்துவருகிறது.

நேற்றுக்காலை ஒரு பள் ளியின் இடிபாடுகளை அகற்றியபோது உள்ளே மாணவர்கள் சிலர் உயிருடன் இருப்பது தெரியவந்தது. அவர்களை வெளியே எடுக்க இடிபாடுகளை மேலும் அகற்றவேண்டும். அதற்குள் அந்த மாணவர்களுக்கு உதவ தண்ணீர் பக்கெற்றுக்கள் உள்ளே போடப்பட்டுள்ளன.

பல்வேறு பகுதிகளிலும் பலதரப்பட்ட அமைப்புக்கள் தொடர்ந்தும் மீட்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றன. (ற)

WORLD NEWS உலக தரிசனம்

## நிவாரணம் மற்றும் மீட்புப் பணிகளில் இணைந்து செயற்பட முடியாது –பாக்.

நிவாரணப் பணியில் இந்தியாவுடன் இணைந்து செயற்பட முடியாதென பாகிஸ்தான் அறிவித்துள்ளது.

பாகிஸ்தானில் நடைபெற்றுவரும் பூகம்ப நிவாரணப் பணிகளில் உதவத் தயார் என்று இந்தியா அறிவித்திருந்தது. இந்நிலையில் பாகிஸ்தான் வெளியுறவு அமைச்சகத்தின் புதிய பெண் செய்தித் தொடர்பாளர் தஸ்லீன் அஸ்லம், நேற்று நிருபர்களுக்கு அளித்த பேட்டியில் இவ் அறிவிப்பை வெளியிட்டார்.

அவர் அப்பேட்டியில் மேலும் கூறியுள்ளதாவது,

பாகிஸ்தானுக்கு உதவ முன்வந்துள்ள பிரதமர் மன்மோகன்சிங்கின் பெருந்தன்மைக்கு நன்றி. நிவாரணப் பணிகள் குறித்து தற்போது நாங்கள் மதிப்பீடு செய்து வருகின்றோம். எங்களுக்கு வெளிநாட்டு உதவிகள் கிடைத்து வருகின்றன. இந்தியாவின் உதவி தேவைப்படுமா? என்று பரிசீலித்து முடிவு செய்வோம். அதே நேரத்தில் எங்களுக்கு அவர்கள் உதவ முன்வந்தது போல் நாங்களும் இந்தியாவுக்கு உதவத் தயாராக இருக்கிறோம். அதுபற்றி முறைப்படி இந்தியாவிடம் தெரிவித்து விட்டோம்.

எனினும், எல்லைக்கட்டுப்பாட்டுக்கோட்டின் இருபகுதிகளிலும் நிவாரணப் பணிகளில் இரு நாடுகளும் இணைந்து செயற்படமுடியாது. அந்தப் பகுதிகளில் மக்கள் யாரும் வசிக்கவில்லை. பாகிஸ்தான் ஆக்கிரமிப்பு காஷ்மீப் பகுதியில் மட்டுமே பாக். இராணுவம் நிவாரணப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றது. இவ்வாறு பாகிஸ்தான் செய்தி தொடர்பாளர் மேலும் கூறியுள்ளார். (ற)



**ஜப்பானில் வடிவமைக்கப்பட்ட ஒலியை விட இருமடங்கு வேகமாகச் செல்லக்கூடிய ஆளில்லா விமானம் வெற்றிகரமாகத் தரையிறங்கியது. அவ் விமானத்தைப் படத்தில் காணலாம்.**

## கராத்தே தியாகராஜன் அலுவலகத்தில் தீ விபத்து

(சென்னை)

சென்னை மாநகராட்சி மன்றக் கட்டடத்தில் உள்ள துணை மேயர் கராத்தே தியாகராஜன் அலுவலகத்தில் நேற்று முன்தினம் தீ விபத்து ஏற்பட்டது. இதில் துணை மேயர் அலுவலகம் முற்றாகத் தீயில் எரிந்து நாசமாகியுள்ளது.

குளிரூட்டியில் ஏற்பட்ட மின் கசிவு காரணமாகவே இத் தீ விபத்து ஏற்பட்டதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சென்னை மாநகராட்சி மன்றக் கட்டடத்தில் இரண்டாவது தளத்தில் உள்ளது துணைமேயர் அலுவலகம். அதன் அருகே தலைமை பொறியாளர் அலுவலகம் உள்ளது. காலை 11மணியளவில் தலைமைப் பொறியாளர் அலுலகத்தில் உள்ள குளிரூட்டியில் மின் கசிவு ஏற்பட்டு தீ விபத்து ஏற்பட்டது. மளமளவெனப் பரவிய தீ அருகில் இருந்த துணை மேயர் அலுவலகத்திற்கும் பரவியது. துணை மேயர் அலுவலகத்தில் இருந்து வெளிவந்த புகையைப்பார்த்த மாநகராட்சி ஊழியர்கள் தீ அணைப்புப் படையினருக்கு தகவல் கொடுத்தனர்.

தீ விபத்தை அறிந்த மாநகராட்சி ஊழியர்கள் அலறி அடித்துக்கொண்டு வெளியேடினர்.



தீயணைப்புப் படையினர் 8 தீயணைப்பு வண்டிகளில் சென்று தீயைப் அணைத்தனர். தீ விபத்தில் உயிர்ச் சேதம் ஏதும் ஏற்படவில்லை. துணை மேயர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த நாற்காலிகள், மேசைகள், பிரிடஜ் ஆகியவை தீயில் எரிந்து நாசமாகின. அதேபோல தலைமைப் பொறியாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருந்த மேசைகளும் நாற்காலிகளும் தீயில் கருகின. அரைமணிநேர போராட்டத்திற்குப் பின்பு தீ அணைக்கப்பட்டது.

கராத்தே தியாகராஜன் தலைமறைவாகியுள்ள நிலையில் அவரது அலுவலகத்தில் ஏற்பட்ட தீ விபத்து பெரும் சர்ச்சையைக் கிளப்பியுள்ளது. (ற)

# தமிழரை இராணுவத்தினர் இனியும் ஏமாற்ற நினைப்பது முட்டாள்தனம்

## யாழ். பல்கலை மாணவர் ஒன்றியம் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ் மக்களை இனியும் ஏமாற்ற நினைப்பது முட்டாள்தனம் என்பதனை மாவட்ட இராணுவத் தளபதி சுனில் தென்னக்கோனுக்கு தெளிவுபடுத்த விரும்புகின்றோம். என்று யாழ். பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

தமிழ் மக்களை அவர்களது கலாச்சாரத்தினையும் பண்பாட்டு விழுமியங்களையும் கல்வி பொக்கிஷங்களையும் அழிப்பதன் ஊடாக அழித்து விடலாம் என்ற நப்பாசையுடன் இன்றைக்கு 24 வருடங்களுக்கு முன்னர் ஸ்ரீலங்கா இராணுவப் புலிப்படைகளால் திட்டமிட்டு எரித்து அழிக்கப்பட்ட யாழ். பொது நூலகத்திற்கு ஸ்ரீலங்காப்படைகளின் 56ஆவது ஆண்டு நிறைவையொட்டி ஒரு இலட்சம் ரூபாவினை யாழ். மாவட்ட இராணுவத் தளபதி வழங்கியமையானது இனியும் தமிழ் மக்களை ஏமாற்றி விடலாம் என்ற இராணுவத் தளபதிகளின் கற்பனை மிகுதியையே எடுத்துக் காட்டுகின்றது.

தமிழ் மக்கள் அனைவரும் பொங்கு தமிழர்களாய் எழுந்து நின்று இராணுவத்தைப் பார்த்து உங்கள் வீடுகளுக்குச் சென்று விடுங்கள், எம்மை சொந்த வீட்டில் சொந்த ஊரில் வாழ விடுங்கள், என்று அமைதியான முறையில் கேட்பதனைச் சற்றும் பொருட்படுத்தாமல் உயர்பாதுகாப்பு வலயங்கள் என்றும் காவல் அரணகள் என்றும் மக்கள் வாழ்விடங்களில் தமது ஆக்கிரமிப்பு படைகள் சகிதம் ஆக்கிரமித்திருக்கும் இராணுவத்தளபதி 24 வருடங்களுக்கு முன்னர் தங்களால் நூல் நிலையம் எரிக்கப்பட்ட தவறை உண்மையில புரிந்து கொண்டு அந்த ஒரு இலட்சம் ரூபாய் பணத்தினை வழங்கியிருந்தால் நிச்சயம் இன்று தமிழ் மக்களின் கருத்துக்களுக்கு மதிப்பளித்திருப்பார்கள்.

மக்களின் வாழ்விடங்களிலிருந்து தமது ஆக்கிரமிப்புப்படைகளை அகற்றியிருப்பார்கள் எனவேதான் சொல்கின்றோம் நீங்கள் செய்ததையும் இன்று உங்கள் இராணுவப் புலனாய்வாளர்கள் செய்வதனையும் எமது இனத்தை அழிக்க எடுக்கும் முயற்சிகளையும் உடனடியாக நிறுத்துவதே சிறப்பாக அமையும்.

அதைவிடுத்து எம்மை இனியும் ஏமாற்ற நினைக்கும் தங்கள் முட்டாள்த் தனத்தினை தமிழ் மக்கள் நன்றாகவே புரிந்து விட்டார்கள் என்பதனை தாங்கள் புரிந்து கொள்வது ஸ்ரீலங்காவிற்கு நன்மை அளிக்கும் என்றே நாம் கருதுகின்றோம்.

மனித நேயமின்றி அப்பாவி பாடசாலை மாணவர்களையும் குழந்தைகளையும் குண்டு போடடு அழித்த நீங்கள் அவர்கள் வெள்ளை உடைகளை குருதி மழையில் சிவப்பாக்கிய நீங்கள் இன்று இரத்ததானம் செய்வது எமக்கு வியப்பளிக்கின்றது.

தங்களிடம் அன்பாக வேண்டுகின்றோம் முடிந்தால் எம்மை வாழ விடுங்கள் எங்கள் வாழ்விடங்களைச் விட்டுச் சென்று விடுங்கள் அதை விடுதது எம்மை ஏமாற்ற நினைத்தால் ஏமாறுவது தாஙகள்தான் என்பதனை தங்களுக்கு புலப்படுத்த விரும்புகின்றோம். என்று அவ் ஒன்றியம் விடுத்துள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளது.

(ற)

## விஜயதசமி நாள் .வகுப்பு

(யாழ்ப்பாணம்)

அகில இலங்கைத் திருமுறை மன்றம் கொழும்புத்துறை மேற்கில் நடாத்தி வரும் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுப்பு விஜயதசமியை முன்னிட்டு நாள் வகுப்பு இன்று புதன்கிழமை மு.ப. 11 மணிக்கு கொழும்புத்துறை இந்து மகாவித்திய லாயத தில் வித்தியாலய அதிபர், தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் இலவசத் தேவாரப் பண்ணிசை வகுபபை தேவார இசைமணி கலாபூசணம் கே. எஸ்.ஆர் திருஞானசம்பந்தன் ஆரம்பித்து வைப்பார். தொடர்ந்து பிரதி சனிக்கிழமைகளில் இவ் வகுப்பு நடைபெறும். (ற)

## தேசிய வாசிப்பு மாதம்

ஒகடோபர் மாதம் யாழ்குடாநாட்டின் தேசிய வாசிப்பு மாதமாக அனுஷ்டிககப்பட்டு வருகிறது.

நூலகங்கள், பாடசாலைகள் மற்றும் சன சமூக நிலையங்களில் இம்மாதம் தேசிய வாசிப்பு மாதமாக பிரகடனப் படுத்தப்பட்டுள்ளது, (து-124)

# தேர்தலுக்கு முன்பே ஜே.வி.பி யின் பிடி இறுகுகிறது? இருதலைக் கொள்ளி எறும்பின் நிலையில் மஹிந்த

(கொழும்பு)

ஒரே மேடையில் ஒன்றாக இணைந்து மக்களைச் சந்திக்க முடியாத கூட்டமைப்பு அரசாங்கத்தினால் எவ்வாறு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்று எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரம சிங்கவினா எழுப்பியுள்ளார்.

கெட்டிப்பொல பகுதியில் நேற்று முனதினம் இடம்பெற்ற மக்கள் சந்திப்பு ஒன்றில கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இந்த வினாவை எழுப்பினார்.

நாட்டின் பிரச்சினைகளைத் தீர்க்க முன் வருவதற்கு முன் கூட்டமைப்பில் அங்கம் வகிக்கும் கட்சிகளுக்கிடையில் நிலவும் சிக்கல்களைத் தீர்த்துக்கொள்ள வேண்டும் அத்துடன் அவர்களுக்கு நாட்டில் பிரச்சினைகள் தொடர்பில் ஒரு இணக்கப்பாடான கொள்கை வேண்டும். ஆனால் அவை இரண்டும் கூட்டமைப்பு அரசாங்காத்திடம் இல்லை என்று அவா கூறினாா.

தொடர்ந்து அங்கு உரையாற்றிய ரணில் கழுத்தறுக்கும் கூட்டமைப்புடன் இருந்து கொண்டு எவ்வாறு மக்களின் பிரச்சினைகளைத் தீர்க்க முடியும் என்பதை நாட்டுக்கும் மக்களுக்கும் தெளிவு படுத்தவேண்டிய கடப்பாடு மஹிந்தவுக்கு உள்ளது. கடந்த தடவை தங்களுக்குள் மோதிக்கொண்டு பிளவுபட்டதினால்தான் அரசாங்கம் விழுந்தது. தற்போது ஜனாதிபதிததேர்தல் ஆம்பிக்கும் முன்னரே மோதிக் கொள்ள ஆரம்பித்துள்ளனர். என்ன நடக்கும் என்பதனை காலம்தான் சொல்ல வேண்டும். எம்முடன் சேர்ந்து கொண்டவர்கள் உறுதியாக உள்ளார்கள்.

ஜே.வி.பி.மஹிந்தவுடன் சேர்ந்து தோன்றும் பரசார மேடைகளில் ஹெல உறுமய உறுபபினர்களுக்கு உரையாற்ற வாய்ப்பு அளிக்கப்படுவதில்லை அவர்களுக்கு தடை உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

ஹெல உறுமயத் தலைவர் அத்துரலிய தேரருக்குக்கூட அந்தப் பிரச்சார மேடைக்கு செல்ல முடியாத நிலையே ஏற்பட்டுள்ளது.

மறு புறத்தில் பார்த்தால் வாசுதேவ நாணயக்காரவுக்கும் இந்த நிலைமைதான் அவரும். இந்த பிரசார மேடைகளில் தோன்ற அனுமதிககப்படுவதில்லை இதனை எல்லாம் பார்க்க ஆச்சரியமாகவுள்ளது. கூட்டமைப்பு ஒன்று சொல்லபடுகிறது ஆனால் அதில் உள்ளவர்கள் அனைவரும் ஒரே மேடையில் தோன்ற முடியாது. (து-8)





தேரேறி வீதி வலம் வரும் வண்ணை ஸ்ரீவேங்கடேச வரதராஜப் பெருமாள். (படங்கள்:-ரீ.திலீப், எஸ்.தவராசா)

# தேசிய பிரச்சினை தீர்வுக் கொள்கையை —மஹிந்த வெளிப்படுத்த வேண்டும்—

## ஐ.தே.க வலியுறுத்து

(கொழும்பு)

ஸ்ரீலங்கா சுதந்திரக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷ நாட்டின் தேசிய பிரச்சினையை தீர்ப்பதற்கான கொள்கையை வெளிப்படுத்தவேண்டும் என்று ஐக்கிய தேசியக்கட்சியின் பிரதிப்பொதுச் செயலாளர் திஸ்ஸஅத்தநாயக்க வலியுறுத்தியுள்ளார்.

கொழும்பில் நேற்று முன்தினம் நடை பெற்ற ஊடகவியலாளர் மாநாட்டிலேயே திஸ்ஸஅத்த நாயக்க இதனை வலியுறுத்தியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக கட்சியும் ஒன்றிணைந்து வடக்கு கிழக்கு பிரச்சினைக்கு தீர்வு காண வேண்டிய அரசியல் செயற்பாடுகள் குறித்து பிரதமர் தெளிவு படுத்த வேண்டும் என்று.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவும் ஐக்கய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் ஒன்றுக்கொன்று ஏற்றுக் கொளளக்கூடிய விதத்தில் சர்வதேச சமுகத்தின் முன்னாள் இணக்கப்பாட்டுக்கு வந்தால் அந்த பின்னணியில் பிரதமர் மஹிந்த ராஜபகஷ செயற்படத் தயாரா ? இந்நாட்டின் பொருளாதாரக கொள்கை குறித்தும் பிரதமர் தெளிவு படுத்தவேண்டும்.

ஜே.வி.பி சமநிலைப் பொருளாதாரம் ஒன்றை ஏற்படுத்த வேண்டும் எனக் கூறி வருகின்றது. பெரிதும் மக்களை பிரதி நிதித்துவப்படுத்தும் ஐக்கிய தேசியக்கட்சியும் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியும் திறந்த பொருளாதாரக் கொள்கையை தெளிவு படுத்த வேண்டும் எனக் கூறுகின்றனர்.

ஜாதிகஹெல உறுமய வேறொரு கருத்தைக் கூறுகின்றது. இவ்வாறாக பாரியளவு வேறுபட்ட கொள்கைகளை வைத்துக் கொண்டு எவ்வாறு இந்த நாட்டின் ஒரே பொருளாதாரக் கொள்கையை முன்னெடுப்பது என்றும் திஸ்ஸ அத்தநாயக்க மேலும் கேள்வி எழுப்பியுள்ளார். (ற-8)

## வாணிவிழா

(யாழ்ப்பாணம்)

புத்தூர் ஸ்ரீ சோமஸ்கந்தக் கல்லூரியின் இந்து மன்றத்தால் நடத்தப்படும் வாணிவிழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு கல்லூரியின் பிரதான மண்டபத்தில் இடம் பெறவுள்ளது.

இந்துமாமன்றத் தலைவர் சு.ரகிந்தன் தலைமையில் இடம்பெறவுள்ள இந் நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவரும் முன்னாள் ஆசிரியருமான "சிறுவைக் கிழார்" சைவப்புலவர் இ. செல்லத்துரை பிரதம விருந்தினராகக் கலந்து சிறப்பிக்கவுள்ளார்

இந்நிகழ்வில் மாணவர்களின் கலை நிகழ்சசிகள் மற்றும் இந்து கலாசார அமைச்சு உத்தியோகத்தர் செல்வி சி.மகிந்தினியின் சிறப்புச் சொற்பொழிவு என்பன இடம் பெறவுள்ளன. (ற)

★ ★ ★

யாழ் மாநகர சபையின் வாணி விழா நிகழ்வுகள் இன்று நண்பகல் 12 மணிக்கு மாநாகர சபை பிரதான மண்டபத்தில் மாநகர சபை ஆணையாளர் சி.வி.கே.சிவஞானம் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் வேதநாயகம் சிறப்புச் சொற்பொழி வாற்றுவாா. அதனைத்தொடர்ந்து மாநகர சபை ஊழியர்களின் கலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளது. (த-7)

## அடிக்கல் நாட்டு விழா

(புலோலி)

காந்தியூர் முன்பள்ளிக்கும் பருத்தித் துறை அத்தியடி முன்பள்ளிக்கும் நிரந்தர கட்டடங்களை நிர்மாணிப்பதற்கு சிறுவர் பாதுகாப்பு நிதியம் 30 இலட்சம் ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்துள்ளது.

தமிழர் புனர்வாழ்வுக்கழகத்தின் அனுசரணையுடன் வடக்கு- கிழக்கு மாகாண முன்பளளி கல்வி மேம்பாட்டு நிலையத்தினால் இத் திட்டங்கள் நடைமுறைப்படுத்தப்படுகின்றன்.


இவ் இரு முன்பள்ளி கட்டடங்களுக்கான அடிக்கல் நாட்டும் விழா இன்று புதன்கிழமை பிற்பகல் 4 மணிக்கு நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (த-52)

# தென் ஆபிரிக்காவுடனான தொடரை வெல்வோம் என்கிறார் நியூசிலாந்து அணி கப்டன் பிளமிங்

தென் ஆபிரிக்காவுக்கு எதிரான ஒரு நாள் தொடரில் முழுமையாக ஆதிக்கம் செலுத்துவோம் என்கிறார் நியூசிலாந்து கப்டன் ஸ்ரீபன் பிளமிங்.

தென் ஆபிரிக்கா வரும் நியூசிலாந்து அணி 5 போட்டிகள் கொண்ட ஒருநாள் தொடரில் விளையாடவுள்ளது. முதல் போட்டி எதிர்வரும் 23ஆம் திகதி நடைபெறவுள்ளது. இதற்காக நியூசிலாந்து வீரர்கள் நேற்று ஜொகன்னஸ் பேக் வந்தார்கள். அங்கு ஒருவாரம் பயிற்சி மேற்கொள்ளும் அவர்கள் தென் ஆபிரிக்காவுக்கு எதிராக வென்ரி 20 போட்டி ஒன்றில பங் கேற்கின்றனர்.தென் ஆபிரிக்க அணி விளையாடும் முதல் சர்வதேச வென்ரி 20 போட்டி இது.

இத்தொடா குறித்து நியூசிலாந்து அணி கப்டன் ஸ்ரீபன் பிளமிங் கூறுகையில், முழுமையாக ஆதிக்கம் செலுத்தி கோப்பை வெல்வோம். தற்போது வீரர்கள நல்ல நிலையில் உள்ளனர். என நம்பிக்கை தெரிவித்தார். கடந்த ஆண்டு நியூசிலாநதில் நடந்த ஒருநாள் தொடரில் தென் ஆபிரிக்க அணி 1-5 என்ற கணக்கில் படுதோல்வி அடைந்தது. இதறகு சொந்த மண்ணில் பழிதீர்கக காத்திருக்கிறது.



நியூசிலாந்து நட்சத்திர பந்து வீச்சாளரான ஷேன் பாண்ட அணியல் இடம் பெற்றுள்ளார். உடல் தகுதியின்மை காரணமாக கிறிஸ் கெய்ன்ஸ நீக்கப்பட்டுளளார். ஒருநாள் தொடர் முடிந்ததும் மூனறு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடர் அடுத்த ஆண்டு ஏப்ரல் மாதம் நடைபெறவுள்ளது.

கப்டன் விக்றோரி, அடம், ஆஷ்லே, பாணட், பிராங்கிளின், ஹமிஷ்மார்ஷல், ஜேம்ஸ மார்ஷல், மக்கல்லம், மக்மில்லன், மில்ஸ், ஓரம் ஜிதேன் பட்டேல்ஸ் டைரிஸ மற்றும் வின்சென் ஆகியோர் அணியில் இடம்பெற்றுள்ளனர். (அ-19)

## சுப்பர் டெஸ்ட் போட்டி
# உலக லெவன் அணி திறமையை வெளிப்படுத்தும் என்கிறார் இங்கிலாந்து வீரர் பிளிண்ரொப்



அவுஸ்திரேலிய அணிக்கு எதிரான சுப்பர் டெஸ்ட் போட்டியிலஉலக லெவன அணி தனது திறமையை வெளிப்படுத்தும் என்று சகலதுறை ஆட்டக்காரர் பிளிண்ரொப் மற்றும் கில்கிறிஸ்ட் ஆகியோ நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

உலக லெவன் அணி மற்றும் அவுஸ்திரேலிய அணிகளுக்கு இடையே மெல்போர்ன் நகரில் மூன்று ஒருநாள் போட்டிகள் கொண்ட தொடர் நடைபெற்றது. இந்த ஒருநாள் தொடரில் அவுஸ்திரேலிய அணி 3-0 என்ற கணக்கில் உலக லெவன் அணியை வென்று தொடரைக் கைப்பற்றியது.

அடுத்ததாக அவுஸ்திரேலிய அணி மற்றும் உலக லெவன் அணிக்கு இடையே 6 நாள் கொண்ட சுப்பர் டெஸ்ட் போட்டி வெள்ளியன்று துவங்குகிறது.

முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளில் அவுஸ்திரேலிய அணி வெற்றி பெற்றதால மூன்றாவது ஒருநாள் போட்டியில் உலக லெவன் அணி வெற்றி பெறும் என்று எதிர்பாக்கப்பட்டது.

ஆனால் உலக லெவன் அணி முதல் இரண்டு ஒருநாள் போட்டிகளை விட மூன்றாவது ஒருநாள் போட்டியில் மோசமாக ஆடி 156 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்வியடைந்தது. இதனால் மிகுந்த ஏமாற்றமடைந்த ஷேன் பொலக் தலைமையிலான உலக லெவன் அணியினர் டெஸ்ட் போட்டியில் எப்படியாவது வெற்றி பெறவேண்டும் என்று துடிக்கின்றனர்.

இங்கிலாந்துக்கும், அவுஸ்திரேலிய அணிக்கும் இடையே சமீபத்தில் நடைபெற்ற ஆஷஸ் தொடரை இங்கிலாந்து அணி 2-1 என்ற கணக்கில் வென்றது. இந்த வெற்றியில் முக்கிய பங்கு வகித்தவர் இங்கிலாந்து அணியின் சகலதுறை ஆட்டக்காரர் அன்ரு பிளிண்ரொப். இவர் அந்தத் தொடரில் துடுப்பாட்டம் மற்றும் பந்துவீச்சில் பிரகாசித்தார்.


சமீபத்தில் முடிவடைந்த சுப்பர் தொடர் ஒருநாள் போட்டியில், தொடர் நாயகன் விருதினைப் பெற்றவர் ஆஸி. அணியின் அதிரடி வீரரான ஆடம் கில்கிறிஸ்ட். இங்கிலாந்திற்கு எதிரான ஆஷஸ் தொடரில் சரியாக ஆடாத ஆடம் கில்கிறிஸ்ட் மீண்டும் தனது இயல்பு நிலைக்கு திரும்பி சுப்பர் தொடரில் நன்கு ஆடினார்.

மேற்படி இருவருமே சுப்பர் டெஸ்ட் போட்டியில் உலக லெவன் அணி தனது தரமிக்க ஆட்டத்தை வெளிப்படுத்தும் என்று நம்பிக்கை தெரிவித்துள்ளனர்.

உலக லெவன் அணியில் தலைசிறந்த வீரர்கள் உள்ளனர். டெஸட் போட்டியில் அவர்கள் ஒருங்கிணைந்து ஆடி வெற்றி தேடித்தருவார்கள். ஒருநாள் போட்டியை விட டெஸ்டில் அந்த அணி எளிதாக வெற்றி பெறும் என்றார் பிளிண்ரொப்.

டெஸ்ட் போட்டியில் பளிண்ரொப் தனது திறமையை வெளிப்படுத்துவார். ஒருநாள போட்டி லொத்தர் போன்றது தான். டெஸ்ட போட்டியில்தான் வீரர்களின் முழுத்திறமையும் வெளிப்படும் என்றார் அடம் கில்கிறிஸ்ட்.

உலக லெவன் அணியில் இடம்பெற்ற சில வீரர்கள் போட்டிக்குத் தயார் ஆகாமல் பெயரளவிற்கு ஆடினார்கள். சில வீராகள் மட்டுமே நன்கு ஆடினர். டெஸ்ட் போட்டியில் இவர்கள் நன்றாக ஆடுவார்கள என்று உலக லெவன் அணியின் கப்டனான ஷேன் பொலக் நம்பிக்கை தெரிவித்தார். (அ-19)



மங்கோலியா நாட்டு சுமோ மல்யுத்த வீரர் யோகாசுனா தன்னை எதிர்த்து மோதிய சீயோடைகாய்யை அடித்துவீழ்த்தி போட்டு இருக்கிறார். அமெரிக்காவில் உள்ள லாஸ்வேகாஸ் நகரில் நடந்த இந்தச் சண்டையில் இப்படி மாமிச மலைகள் மோதிக்கொண்டு பூமியில் சாய்ந்ததால் அங்கே பூகம்பம் வந்திருக்காதா?


# இலங்கை - இந்திய தொடர் நடுவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்

இந்திய - இலங்கை அணிகள் மோதும் ஒருநாள் தொடருக்கான நடுவர்கள் அறிவிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை அணி இம்மாதம் இந்தியாவுக்குச் சுற்றுப்பயணம் மேற்கொண்டு 7 ஒரு நாள போட்டிகள் கொண்ட தொடரில் பங்கேற்கிறது. பின்னர் தாயகம் திரும்பும் இந்த அணி டிசம்பரில் 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடவுள்ளது.

அவுஸ்திரேலியாவைச் சேர்ந்த அலன் ஹர்ஸ்ட் ஒருநாள், மேற்கிந்தியத் தீவைச் சேர்ந்த கிளைவ்லொயிட் டெஸ்ட் தொடருக்கான போட்டி நடுவர்களாக நியமிக்கப்பட்டுள்ளனர்.

பில்லி பவுடன் (நியூசி), மார்க் பென்சன (இங்கிலாந்து) இருவரும் ஒருநாள் தொடருக்கான ஐ.சி.சி நடுவர்களாக தேர்வு செய்யப்பட்டுள்ளனர். இந்தியாவின் சார்பில் ஹரிஹரன், சிவராம், ஜெயபிரகாஷ் ஆகியோர் நடுவர்கள் பணியை கவனிக்கின்றனர். (அ-19)



உலகின் நம்1 ரென்னிஸ் வீராங்கனை மரியசரபோவாவுக்கு 'இந்த ஆண்டின் சிறந்த ரஷ்ய நாட்டு விளையாட்டு வீராங்கனை' என்கிற பட்டமும், பரிசுக் கோப்பையும் நேற்றுமுன்தினம் வழங்கி மாஸ்கோ நகரில் கௌரவித்தார்கள்.

# தரவரிசையில் முன்னேறும் சானியா மிர்சா

சானியாமிர்சா உலகதர வரிசையில் 6 இடம் முன்னேறி 31ஆவது இடத்துக்கு வந்து விட்டார்.



இந்திய ரென்னிஸ் நட்சத்திர வீராங்கனை சானியா மிர்சா ரென்னிஸ் உலகில பல சாதனைகளைப் புரிந்து இந்தியாவுக்கு பெருமைகளை சேர்த்துள்ளார்.

சானியா இதற்கு முன்பு உலக தர வரிசையில் 37ஆவது இடத்தில் இருந்தார். நேற்றுமுன்தினம் புதிய உலக தரவரிசைப் பட்டியலை உலக ரென்னிஸ் சங்கம் வெளியிட்டது. அதன்படி சானியா 6இடம் முன்னேறி 31ஆவது இடத்துக்கு வந்து இருக்கிறார். அவர் சமீபத்தில் நடநத ஜப்பான் ஓபன் ரென்னிஸ் போட்டியில் அரையிறுதி போட்டி வரை முன்னேறினார். இதனால் அவருக்கு 311 புள்ளி கூடுதலாக கிடைத்தது. எனவே மொத்தத்தில சானியாவுக்கு 966.50 புள்ளி ஆனாது.

34ஆவது இடத்திலிருந்த சானியா மிர்சா, கொல்கத்தா சன்பீஸ்ட் போட்டியில் 2ஆவது சுற்றிலேயே வெளியேறியதில் தரவரிசையில் 37ஆவது இடத்துக்குப் பின் தள்ளப்பட்டார். இப்போது 6இடம் முன்னேறி 31ஆவது இடத்துக்கு வந்திருக்கிறார்.


இரட்டையர் தரவரிசையில் சானியா இதுவரை 128ஆவது இடத்தில் இருந்தார். இப்போது 14 இடம் முன்னேறி 114 ஆவது இடத்துக்கு வந்திருக்கிறார். ஜப்பான், ஓபன் ரென்னிஸ் இரட்டையர் போட்டியில் சானியாவும், இஸ்ரேல் வீராங்கனை சகார் பீரும் ஜோடியாக இணைந்து விளையாடி அரையிறுதி போட்டிவரை வந்தார்கள். இதனால் சானியாவின் தரவரிசையில் 14 இடம முன்னேற்றம் ஏற்பட்டது.

இந்திய வீரர்களில் உலக தரவரிசைப் பட்டியலில் முதல் வகிப்பவர் ஹர்ஸ்மன காட் ஆவார். இவர் இதுவரை 234ஆவது இடத்தில இருந்தார். இப்போது 7 இடம் முன்னேறி 227ஆவது இடத்துக்கு வந்திருக்கிறார்.

ஆண்கள் இரட்டையர் தர வரிசையில் 12ஆவது இடத்தில் இருந்த மகேஷ்பூபதி 13ஆவது இடத்துக்கும், 14ஆவது இடத்தில் இருந்த லியாண்டர் பெயஸ் 15ஆவது இடத்துக்கும் பின் தள்ளப்பட்டிருக்கிறார்கள். (அ-19)

## விளையாட்டு செய்திகள்

# தாய் மண்ணுக்கு தனிமரியாதை என்கிறார் முன்னாள் கிரிக்கெற் வீரர் அலன் போடர்



சுப்பர் சீரிஸ் ஒருநாள் தொடரில் நிறைய எதிர்பார்ப்பு இருந்தது. ஆனால் எதிர்ப்பே இல்லாததால் எல்லாம் அவுஸ்திரேலியா பக்கம் சாதகமாக முடிந்தது. அசுர தாக்குதல் நடத்திய அவுஸ்திரேலியா - உலக லெவனை மூச்சு விடக்கூட அனுமதிக்கவில்லை. ஆஷஸ் தொடரை இழந்த போதும் பொண்டிங் படை தங்களது உடல் தகுதியை இழக்கவில்லை. அதே நேரத்தில் லாரா, கிறிஸ் கெய்ல், அக்தர் போன்றவர்கள் நீண்ட நாட்களாக போட்டிகளில் பங்கேற்காமல் இருந்தனர். மற்றவர்கள் முதல் தர மோதல்களில் பங்கேற்கவில்லை. இந்த வித்தியாசம் இரு அணிகளின் ஆட்டத்திலும் தெளிவாகத் தெரிந்தது.

அவுஸ்திரேலியாவின் வெற்றித் தாகம், உறுதிமிக்க ஆட்டம் போன்றவை சுப்பர் தொடருக்கு அதிகாரபூர்வ அந்தஸ்து அளித்தது சரியானதே என்பதை உணர்த்தியது.

உலக லெவன் வீரர்களை பொறுத்தவரையில் மனதளவில் தயாராகவில்லை. ஒரு நாட்டுக்காக விளையாடுவது என்பது மிகப் பெரிய கௌரவம். தாய் நாட்டின் கொடி தாங்கி களமிறங்கும் போது சாதிக்கத் தேவையான துடிப்பு தானாகவே வந்துவிடும். இந்த நாட்டுப்பற்றுக்கு நிகரான உணாவாக வேறு எதையும் குறிப்பிட இயலாது. உலக லெவனில் ஒருவராக இடம்பெற்றது எல்லாம இந்த பெருமைக்கு ஈடாகாது ஆஸி.நிஜ சம்பியனாக விளையாடியது.

ஆஷஸ் தோல்விக்குப் பிறகு தங்களை நிரூபிக்க வேண்டிய கட்டாயத்தில் இருந்த அவுஸ்திரேலிய வீரர்கள் நிஜ சம்பியன்களாக விளையாடினர். கில்கிறிஸ்ட், பிரட்லீ அதிரடியாக செயல்பட்டது திருப்தி தந்தது.

ஒவ்வொரு வீரரும் தனிப்பட்ட முறையில் சிறப் பாக செயல்பட்டனர். ஷேன் வாட்சன் சகல துறை ஆட்டக்காரராக பிரகாசித்தார். இவரை அவுஸ்திரேலியாவின் புதிய கண்டுபிடிப்பாக குறிப்பிடலாம். உலக லெவனில சங்ககாரா மட்டுமே திறமைக்கு ஏற்ப செயல்பட்டார்.

அடுத்ததாக 6 நாள் டெஸ்ட் சிட்னியில நடைபெறவுள்ளது. இங்குள்ள ஆடுகளம் இந்திய துணைக் கண்டத்தைப் போல துடுப்பாட்டம், சுழல்பந்துக்கு கைகொடுக்கும். இது உலக லெவனில் உள்ள சுழல் வீரர்களான முரளிதரன், விக்றோரிக்கு சாதகமானது. இவர்களோடு வேகப்புயல் ஹர்மிசனும் சேர்ந்து கொள்ளவுள்ளார். சகலதுறை ஆட்டக்காரர்களான கலிஸ், பிளிணரொப் இருப்பதால் உலக லெவன் அணி இழந்த பெருமையை மீட்கலாம்.

அத்துடன் அவுஸ்திரேலிய அணியில ஷேன் வருவதால் ஒரு விறுவிறுப்பான போட்டியாக அமையும் என எதிர்பார்க்கப் படுகிறது. (அ-19)

# சிறுவர், முதியோர் தின போட்டி முடிவுகள்

(மருதங்கேணி)

சர்வதேச சிறுவர், முதியோர் தினத்தையொட்டி பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் உள்ள பாடசாலை மாணவரிடையே நடாத்தப்பட்ட கவிதை, கட்டுரைப் போட்டி முடிவுகள் வெளியாகியுள்ளன.

சர்வதேச சிறுவர் தினப் போட்டி முடிவுகள் வருமாறு,

**கட்டுரைப் போட்டிகள்:**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் : ப.வினோதா, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.
2ஆம் இடம் :க.கௌதமி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.
3ஆம் இடம்:வ.சுஜிவன், ஹாட்லிக் கல்லூரி.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் : கு.தர்சினி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.
2ஆம் இடம் :ந.நிருஷ்னி, வட இந்து மகளிர் கல்லூரி.
3ஆம் இடம்:சி.பாகினி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

**மேற்பிரிவு**

1ஆம் இடம் : சி.சிவரூபி, வட.இந்து மகளிர் கல்லூரி.
2ஆம் இடம் :இ.கோகிலவாணி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.
3ஆம் இடம்: ந.வதனரேகா, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

**கவிதைப் போட்டிகள்:**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் : த.வினோ, சிதம்பரக் கல்லூரி.
2ஆம் இடம் :இ.தனுஷியா, வல்வை சிவகுரு வித்தி.
3ஆம் இடம்:சி.சரத்பவன், ஹாட்லிக் கல்லூரி.

**மத்தியபிரிவு**

1ஆம் இடம் : ச.சத்தியகல்யாணி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.
2ஆம் இடம் :க.சிந்துஜா, வட. இந்து.மகளிரி கல்லூரி.
3ஆம் இடம்: த.ஜீவிதா, வல்வை மகளிர் மகா வித்தி.

**மேற்பிரிவு**

1ஆம் இடம் : க.கலைமகள், வல்வை மகளிர் மகா வித்தி.
2ஆம் இடம் :ச.கேதீஸ்வரி, வட. இந்து மகளிர் கல்லூரி.
3ஆம் இடம்:செ.சுகன்யா, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

சர்வதேச முதியோர் தினப் போட்டி முடிவுகள் வருமாறு,

**கட்டுரைப் போட்டிகள்:**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் : க.சிருஜிகா, பொலிகண்டி இ.த.க.பாட.
2ஆம் இடம் :ந.சங்கீதா, பொலிகண்டி இ.த.க.பாட.
3ஆம் இடம்:இ.ரேணுஜா, சிதம்பரக் கல்லூரி.

**மத்திய பிரிவு**

1ஆம் இடம் : ச.நிறோஜினி, வட. இந்து மகளிர் கல்லூரி.
2ஆம் இடம் :ந.பானுமதி, பொலிகண்டி இ.த.க.பாட.
3ஆம் இடம்:தி.கோமதி, வட.இந்து மகளிர் கல்லூரி.

**மேற்பிரிவு**

1ஆம்இடம்: த.தமிழினி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.
2ஆம் இடம் :சி.வராகினி, சிதம்பரக் கல்லூரி.
3ஆம் இடம்:கெ.கஜந்தினி, மெதடிஸ்த பெ.உ.பாடசாலை.

**கவிதைப் போட்டிகள்:**

**கீழ்ப்பிரிவு**

1ஆம் இடம் : மு.ஜெயதர்சினி, தும்பளை சிவப்பிரகாச ம.வித்தி.
2ஆம் இடம் :த.அனோஜா, கொற்றாவத்தை அ.மி.த.க.பாட.
3ஆம் இடம்:ஆ.அகல்யா, கொற்றாவத்தை அ.மி.த.க.பாட.

**மத்தியபிரிவு**

1ஆம் இடம் : பா.கிருஷாணி, மெதடிஸ்த பெ.உ.பாட.
2ஆம் இடம் :மு.கௌதமி, சிதம்பரக் கல்லூரி.
3ஆம் இடம்: த.றஜீனா, கொற்றாவத்தை அ.மி.த.க.பாட.

**மேற்பிரிவு**

1ஆம் இடம் : ச.ஸ்ரீவாசுகி, சிதம்பரக் கல்லூரி.
2ஆம் இடம்:தே.நித்தியா, சிதம்பரக கல்லூரி.
3ஆம் இடம்:க.கௌசிகன், ஹாட்லிக் கல்லூரி. (த -35,52)

# வாக்காளர்களின் பாதுகாப்பில் பவ்ரல் அமைப்பின் அக்கறை

(கொழும்பு)

வடகிழக்கு பிரதேச வாக்காளர்களின் பாதுகாப்பு தொடர்பாக பாதுகாப்பு படையதிகாரிகள் மற்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஆகியோருடன் கலந்துரையாடியதாக பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் கிங்ஸ்லிரொட்றிக்கோ தெரிவித்துள்ளார்.

வாக்களிக்க வரும் மக்களுக்கு பாதுகாப்பு வழங்குவது தொடர்பாக இக் கலந்துரையாடலில் ஆராயப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குச் சாவடிகளுக்கு 500 மீற்றர் தொலைவில் படையினர் பாதுகாப்பு நடவடிக்கையில் ஈடுபடுத்தப்பட்டு வாக்காளர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்த நடவடிக்கை எடுக்கப்படுமென பாதுகாப்பு அதிகாரிகள் தெரிவித்ததாக கிங்ஸ்லி ரொற்றிக்கோ தெரிவித்தார்.

இதேவேளை வடக்கு கிழக்குப் பிரதேசங்களில் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளில் தென்பகுதியைச் சேர்ந்த ஒருவரையேனும் கடமையில் ஈடுபடுத்துமாறு ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு தேர்தல் ஆணையாளரைக் கேட்டுக் கொண்டுள்ளது.

வடகிழக்குப் பிரதேசத்தில் அமைக்கப்படும் வாக்குச் சாவடிகளில் ஜனாதிபதி தேர்தலின் போது மோசடிகள் இடம்பெறக்கூடுமென இவர்கள் தேர்தல் ஆணையாளரிடம் சுட்டிக்காட்டியதாக தொிவிக்கப்படுகின்றது.

வாக்குச் சாவடிகளில் தென்பகுதியைச் சேர்ந்தவர்களை நியமிப்பதன் மூலம் வாக்கு மோசடிகளைத் தடுக்கமுடியுமென கூட்டமைப்பினர் தேர்தல் ஆணையாளரிடம் தெரிவித்துள்ளார்கள். (து-9)

# முதலுதவி பற்றிய கருத்தரங்கு

(சுதுமலை)

முதலுதவி பற்றிய அறிவு சகல மட்டங்களிலும் ஏற்படுத்துவது இன்றைய உலகில் மிகவும் அவசியம் என கடந்த வாரம் வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற முதலுதவி தொடர்பான தொண்டர்களிற்கான பயிற்சிக் கருத்தரங்கில் வலியுறுத்தப் பட்டுள்ளது. யாழ்.மாவட்ட கூட்டுறவு பயிற்சி ஆசிரியர் தலைமையில் நடைபெற்ற இக் கருத்தரங்கில் யாழ்.மாவட்ட மக்கள் நலன்புரிச்சங்கத்தின் விசேட முதலுதவி விரிவுரையாளர்களால் பயிற்சி வழங்கப்பட்டது. அப்பயிற்சியின் போது தெரிவிக்கப்பட்டதாவது,

யாழ்.மாவட்டத்தில் இன்று பல பகுதிகளிலும் உள்ள வைத்திய சாலைகளில், வைத்தியர்கள், பற்றாக்குறையாக இருந்துவருகின்றது. எனவே திடீர் திடீர் என ஏற்படும் விபத்துக்களில் இருந்து எம்மவர்களைக காப்பாற்ற முதலுதவி பற்றிய அறிவு மிகவும் அவசியமாகின்றது. குறிப்பாக பெண்களிற்கு இது தொடர்பான அறிவு மிக மிக அவசியமாகின்றது எனவும் வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் யாழ்.குடாநாட்டில் தற்போது கட்டாக்காலி நாயகளினால் கடியுண்டோர் தொகை நாளுக்கு நாள் அதிகாத்து தினமும் வைத்திய சாலைகளில் சிகிச்சை பெறுபோர் தொகை அதிகரித்துள்ளது. அத்துடன் பாம்பு கடி மற்றும் விசஜந்துக்களால் தீண்டப்படுவோரும் சிகிச்சைகளை பெற வைத்தியசாலைகளிற்கு வருகிறார்கள்.

எனவே, முதலுதவி பற்றிய அடிப்படை அறிவு இருக்குமிடத்து உடனடியாக எடுக்கவேண்டிய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டால் நஞ்சு பரவும் வீதம் குறைக்கப்படும். ஆபத்திலிருந்து நோயாளி காப்பாற்றப்படுவார் எனவும் இங்கு வலியுறுத்தப்பட்டது.

பாடசாலைகளிலும், வீடுகளிலும் கூரான ஆயுதங்களால் பாதிக்கப்பட்டு அதிகளவு குருதி வெளியேறும் சந்தர்ப்பங்களில் குருதி வெளியேறாது கட்டுப்படுத்துதற்கு மேற்கொள்ளும் நடவடிக்கைகள் தொடர்பாகவும் விளக்கம் அளிக்கப்பட்டு செய்முறை விளக்கங்களும் வழங்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

யாழ.மாவட்டத்தின் பல பிரதேச கூட்டுறவு சமாசங்களைச் சேர்ந்த நூறுக்கும் அதிகமான யுவதிகள இரு பிரிவுகளாக இக்கருத்தரங்கு நிகழ்வில் கலந்து கொண்டமையும் குறிப்பிடத்தக்கது. (அ-252)

# ஆறு கால் ஷு

கண்ணி வெடிகள் மிகவும் ஆபத்தானவை. உலகில் 22 நிமிடத்துக்கு ஒருமுறை ஏதாவது ஒரு பகுதியில் ஒருவர் விதம் கண்ணி வெடிக்கு உயிரிழப்பதாக புள்ளி விபரங்கள் கூறுகின்றன.

ஆப்கானிஸ்தான், கம்போடியா, முன்னாள் யுகோஸ்லோவாகியா, அங்கோலா, மொசாம்பிக் உட்பட பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்கள் இதனால் உயிரைக் கையில் பிடித்துக்கொண்டுதான் வசித்து வருகிறார்கள்.

இந்நிலையில், கண்ணி வெடியில் இருந்து உயிரைக் காக்கும் 6 கால்கள் கொண்ட நவீன ஷு வை சிங்கப்பூரில் உள்ள நான்யாங் டெக்னாலஜிக்கல் பல்கலைக்கழகம் உருவாக்கியுள்ளது.

இந்தக் கருவியை காலணியோடு சேர்த்து பொருத்திக்கொள்ள வேண்டும். இதில் இருக்கும் ஒவ்வொரு காலிலும் கண்ணிவெடியைக் கண்டுபிடிக்கும் உணர்வு கருவிகள் இணைக்கப்பட்டு இருப்பதால், கண்ணி வெடியைக் கண்டுபிடிப்பது எச்சரிக்கை விடுககும். இதன்மூலம் உயிரையும், கால்களையும் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

தற்போது இந்த புதிய ஷு -வுக்கு காப்புரிமை கோரி விண்ணப்பித்துள்ளனர். (ற)

# விஜயதசமி விழா

யாழ்.கனகரத்தினம் மத்திய மகா வித்தியாலயத்தில் இந்து மன்றத்தினரால் நவராத்திரி விஜயதசமி விழா இன்று புதன்கிழமை நடாத்தப்படவுள்ளது.

பொறுப்பாசிரியர் மதுரகவி காரை எம்.பி.அருளானந்தன் தலைமையில் நடைபெறும் இவ் விழாவில் பிரதம விருந்தினராக கலாநிதி மனோன்மணி சண்முகதாஸ் கலந்து கொண்டு பேருரை நிகழ்த்தவுள்ளா. (த)

* * *

(வட்டுக்கோட்டை)

வட்டுக்கோட்டை தெக்கணப்பாய கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வர ஆலய, கண்ணகி அம்மன ஆலய விஜயதசமி விழா இன்று நண்பகல் 2.00 மணிக்கு வசந்த மண்டபப் பூசையுடன் ஆரம்பமாகவுள்ளது. கண்ணகி அம்மன் மூளாய் வீதியூடாக சுவாமி வீதியுலா சென்று சங்கரத்தை இலுப்பையடி வைரவர் ஆலயத்தில் வாழை வெட்டு உற்சவமும் நடைபெறும்.

இவ் ஆலயத்தினால் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களின் கல்விப் பணிக்கும் வயோதிபர்களிற்கும் மாதக் கொடுப்பனவுகள் வழங்கப்பட்டுவருகின்றமை குறிப்பிடத் தக்கது. (ற-39)

# தொடர்பு கொள்க!

தென்மராட்சி கல்வி வலயப் பாடசாலைகளில் பட்டதாரி பயிலுனா ஆசிரியராக கடமையாற்றி இதுவரை நிரந்தர நியமனம் பெறாத ஆசிரியர்களை உடனடியாகத் தென மராட்சி வலய அலுவலகத்து டன தொடர்புகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ற-108)

# நவராத்திரிப் பாமாலை



## இன்று ஒன்பதாம் நாள்

### அறிவின் வடிவே நீ ஆள வேண்டும்

அறிவுக் கனலே மூளட்டும்
அகிலம் எங்கும் சூழட்டும்
விடிவு எமக்குக் கிடைக்கட்டும்
வித்தை மண்ணில் பெருகட்டும்
அடிமை வாழ்வு விலகட்டும்
அன்பு நெறிகள் தளைக்கட்டும்
முடிவு நற்றே அமையட்டும்
முதல்வி வாணி காக்கட்டும்.

மதுரகவி காரை எம்.பி அருளானந்தன்.

### உன்போல் கண்கண்ட தெய்வமுளதோ

மண்கண்ட வெண்குடைக் கீழாக
மேற்பட்ட மன்னருமென்
பணகண டளவிற் பணியச் செய்
வாய்படைப் போன் முதலாம்
விண் கண்ட தெய்வம்பல் கோடியுண்
டேனும் விளம்பிலுன் போற்
கண்கண்ட தெய்வ முளதோ
சகல கலா வல்லியே

*குமரகுருபரசுவாமிகள*

# வாணிவிழா

(புங்குடுதீவு)

யா/புங்குடுதீவு ஸ்ரீ கணேச மகா வித்தியாலயத்தின் வாணி விழா இன்று புதன்கிழமை காலை 10 மணிக்கு அதிபர் எஸ்.கே.சண்முகலிங்கம் தலைமையில் பாடசாலை மணடபத்தில் நடைபெறவுள்ளது.

இதில் பிரதம விருந்தினராக இளைப்பாறிய அதிபர் இரத்தின சபாபதியும், சிறப்பு விருந்தினர்களாக இளைப்பாறிய தீவக வலய முன்பள்ளி உதவிக் கல்விப் பணிப்பாளர் த.தவராசாவும், புங்குடுதீவு ஜே22, ஜே26, சேவையாளர் கு.சந்திராவும் கலந்து கொள்ளவுள்ளனர். (த-126)

# செயலமர்வு

(சாவகச்சேரி)

தென்மராட்சி கல்வி வலயத்தின் 2006ஆம் ஆண்டில் தரம் 10இல் தகவல் தொழில்நுட்பப் பாடத்தைக் கற்பிக்கும் ஆசிரியர்களுக்கான செயலாமர்வு ஒன்று நாளை வியாழக்கிழமை காலை 9.00 மணிக்கு யாழ் மத்திய கல்லூரியில் நடைபெறவுள்ளது.

எனவே பாடசாலையில் 2006ஆம் ஆண்டு தகவல் தொழில்நுட்ப பாடத்தை கற்பிக்கும் ஒரு ஆசிரியரையும், அதிபரையும் இதில் கலந்து கொள்ளுமாறு தென்மராட்சி வலயக கல்விப் பணிப்பாளர் திருமதி. றெஜீனா இருதயநாதன் அறிவித்துள்ளார். (ற-108)

# அசுரத்தனமொழித்த அம்பிகை விழா

புராதன வரலாற்றுச் சிறப்பும், கீர்த்தியும் மிக்க அறுபத்துநான்கு சக்திபீடங்களுள் ஒன்றாக மிளிரும் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோவிலில் வருடாந்த நவராத்திரிச் சிறப்புப் பூசை வழிபாடுகள் கடந்த 4ஆம் திகதி ஆரம்பமாகி இன்று நடைபெறும் மானம்பு நிகழ்வுடன் முடிவடைகிறது.

இன்றைய தினம் அம்பாள் அழகிய சிங்கவாகனத்தில் எழுந்தருளி வாழைவெட்டும் வைபவம் ஸ்ரீ வீரபத்திரர் கோயிலின் கிழக்கு வீதியில் இடம்பெறும்.

நயினாதீவு ஸ்ரீ நாகபூசணி அம்மன ஆலய வரலாற்று நடைமுறையில் மிகப் புராதன காலம் முதல் எழுந்தருளி அம்பாள் நயினையிலுள்ள மிகப் புராதனமான ஏனைய கோயில்களுக்கும் எழுந்தருளுவது பெருஞ்சிறப்பான அம்சமாகும்.

அம்பாளின் அருட்சிறப்பு உலகெங்கும் வியாபித்துள்ள இவ்வேளையில் உலக உயிர்களனைத்தும் அம்பிகையை இறைஞ்சி இன்னருள் பெறுவதறகான விழாவாக இவ் வாழைவெட்டு வைபவம் அமைகிறது.

**வாகீச கலாநிதி**
**கனகசபாபதி நகேஸ்வரன, M.A.**
**சிரேஷட விரிவுரையாளர்,**
**சப்ரகமுவ பல்கலைக்கழகம்.**

உயிர் வர்க்கத்தின் உயர் குணங்களின் மேன்மை வளச்சிக்கெனச் சைவசமய மரபில் வாழைவெட்டும் கிரியை நிகழ்த்தப்படுகின்றது.

அசுரத் தனங்களின் மர்த்தனத்தை, நிஷ்டூரத்தை அடக்கியவள் மகிஷாசுரமர்த்தனி. உலகம் உய்யும் பொருட்டு அருள்பாலித்துக் கொண்டிருக்கும நயினை ஸ்ரீ மகாநாகராஜேஸ்வரி அம்பிகையின் திருவருளைச் சிந்தித்து வந்தித்து நல்வாழ்வு வாழ் வோமாக.

"அம்பிகையைச் சரண்புகுந் தால் அதிகவரம் பெறலாம்"

# சிறந்த ஆசிரியராக தெரிவு

(மருதங்கேணி)

உலக ஆசிரியர் தினத்தை முன்னிட்டு ஆசிரியரிடையே நடாத்தப்பட்ட தேர்வில் குடத்தனை அமெரிகக ன மிசன் தமிழ் கலவன் பாடசாலை ஆசிரியர் எம்.கதிர்காமலிங்கம் சிறந்த ஆசிரியராகத் தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திருகோணமலையில் கடந்த 6ஆம் திகதி நடைபெற்ற வைபவத்தில் இவருக்கான விருதை பெற்றுக் கொண்டார் என்பது குறிப்பிடத் தக்கது. (த-35)

# இன்று ஒரு தகவல்

## குருபக்தி

பக்தி மூன்று வகைப்படும் என்கிறார் ஒரு பெரியவர். தெய்வபக்தி, அடியார் பக்தி,குருபக்தி அடியார் பக்தியை விட தெய்வ பக்தியை விட குரு பக்திதான் மிகவும் சிறந்தது என்கிறார் அவர். தெய்வத்திடம் செய்த பாவம் குருநாதரிடம் தீருமாம். குருநாதரிடம் செய்த பாவம் தெய்வத்திடம் தீராதாம்.

ஒரு நாட்டில் அயோததௌமியர் என்று ஒரு தபோதனர் இருந்தார். அவர் பல மாணவர்களை ஒன்று சேர்த்து ஒரு குருகுலம் ஒன்றினை நடத்திக்கொண்டிருந்தார். பலதரப்பட்ட மாணவர்கள் அதில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தார்கள். பாஞ்சாளர் ராஜகுமாரன் ஒருவனும் அந்த குருகுலத்தில் சேர்ந்து படித்துக்கொண்டிருந்தார். அவன் பெயர் ஆருணி பெரிய இடத்துப் பிள்ளையாக இருந்தாலும் படிப்பில் மிகவும் கெட்டிக்காரனாக இருந்தான். அவன் தான் அங்கே முதல் மாணவன்.

ஒரு நாள் குருநாதர் அந்த அரச குமாரனைக் கூப்பிட்டார். "நமது குருகுலத்திற்குச் சொந்தமான வயலில் தண்ணீர் பெருகி பயிரை அழிக்கிறது. அதனால் நீ போய் மடையை அடைத்துவிட்டுவா" என்றார். அந்த அரச குமாரன் உடனே புறப்பட்டான். "நான் பெரிய இடத்துப் பிள்ளையாயிற்றே... ராஜகுமாரனல்லவா... மிகவும் செல்வாக்குடன் வளர்ந்தவன் அல்லவா நான் போய் வயலில் இறங்கி வேலை செய்வதா? என்றெல்லாம் அவன் நினைக்கவில்லை. "குருநாதர் கட்டளையை நிறைவேற்ற வேண்டியது எனது கடமை என்று நினைத்தான்.

உடனே ஒரு மண்வெட்டியைத் தூக்கி தோள் மீது வைத்துக்கொண்டு புறப்பட்டுவிட்டான். வயலுக்குப் போய்ப்பார்த்தான். தண்ணீர் கரையை உடைத்துக்கொண்டு வயலுக்கு வேகமாக பாய்ந்துகொண்டிருந்தது. இவன் மண்வெட்டியால் கழிமண்ணை புல்லோடு சேர்த்து வெட்டிப்போட்டான். இருந்தாலும் மடையை அடைக்கமுடியவில்லை நீர்வேகமாக வயலுக்குள் போய்க்கொண்டே இருந்தது. போட்ட மண்ணெல்லாம் கரைந்து கரைந்து போய்க்கொண்டிருந்தது. இருந்தாலும் இவன் தனது முயற்சியை கைவிடவில்லை. வெட்டி வெட்டி போட்டுக்கொண்டே இருந்தான்.

காலையில் அங்கே போனவன் மாலை வரைக்கும் இப்படியே செய்துகொண்டிருந்தான் உடலும் மனதும் மிகவும் சோர்ந்துபோய்விட்டது. இருந்தாலும் "குருநாதர் இட்ட கட்டளையை நிறைவேற்றாத நான் இன்னும் இருக்கவேண்டுமா? என்று நினைத்தான். என்ன செய்யலாம் என்று பார்த்தான் நமது குருநாதர் இட்ட பணிக்காக இந்த உடம்பையே தியாகம் செய்யலாம் என்று முடிவுசெய்தான்.பாயும் தண்ணீருக்குக் குறுக்கே படுத்துவிட்டான். இது மற்றவர்களுக்குத் தெரியாது.

அன்றிரவு ஒரு விளக்கின் முன்னால் உட்கார்ந்த குருநாதர் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக்கொடுத்துக்கொண்டிருந்தார்முதல் வரிசையில் இருக்கக்கூடிய இராஜகுமாரனைக் காணவில்லை "ஆருணி எங்கே என்று?" மற்ற மாணவர்களை விசாரித்தார். "சுவாமி அவன் காலையில் வயலுக்குமடை அடைக்கச் சென்றான் இன்னும் திரும்பி வரவில்லை என்றான் ஒரு மாணவன்.

குரு நாதர் உடனே ஒரு தீப்பந்தத்தை எடுத்துக் கொண்டு மாணவர்கள் புடைசூழ வயலுக்குப் போனார் அங்கே போய்ப் பார்த்தால் ஆளைக்காணவில்லை "ஆருணி.. ஆருணி என்று சத்தம் போட்டுக் கூப்பிட்டுப் பார்த்தார். "நான் இங்கே இருக்கிறேன் குருநாதா" என்று காலுக்கு அடியிலிருந்து சத்தம் வந்தது குனிந்து பார்த்தால் அவன் மடையில் படுத்திருக்கிறான் என்னப்பா இது?" என்றார். காலையிலிருந்து இந்த மடையை அடைத்துப் பார்த்தேன் சுவாமி அதனால் இப்படிக் குறுக்கே படுத்துவிட்டேன் என்னைத் தாண்டுவதற்குப் பயந்து தண்ணீர் தேங்கி நின்றுவிட்டது என்றான்.

அவனுடைய குரு பக்தியையும் அவனைத் தாண்டுவதற்கு அஞ்சி நிற்கும் தண்ணீர் தேக்கத்தையும் பார்த்து எல்லோரும் ஆச்சரியப்பட்டுப் போனார்களாம் "ஆருணி எழுந்துவா" என்று கூப்பிடடார். அவன் தண்ணீரைப் பிளந்து கொண்டு வெளியே வந்தான். அதனால் அவனுக்கு உத்தாலகன் என்று பெயர் வந்ததாம் உத்தாலகன் என்றால் தண்ணீரைப் பிளந்தவன் என்று அர்த்தம்.

அந்த உத்தாலகன் மாதிரி இந்தக் காலத்து மாண வர்களுக்கு குருபக்தி வேண்டும் என்று சொன்னேன் ஒரு பள்ளிக்கூடத்தில் உடனே நிறைய மாணவர்கள் எழுந்து நின்றனர் "சார் நீங்கள் எம்மை இன்னும் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை என்று நினைக்கிறோம் அன்றைக்காவது ஒருத்தன் .அப்படி இருந்தான் இன்று ஏகப்பட்ட உத்தாலகர்கள் இருக்கிறோம். எங்கள் வாத்தியார் கட்டளையிட்டால் இப்போதே அது போல் வயலுக்குப் போய் மடையில் குறுக்கே படுத்துக்கொள்ள இந்த வகுப்பில் உள்ள அனைவரும் தயாராக இருக்கிறோம் என்றார்கள்."அப்படியா? என்று கேட்டேன் மிகவும் சந்தோஷமாக ஒருவன் மிக அடக்கமாக எழுந்து இருந்தான். "ஆமாம் சார்! வகுப்பில் பாடம் கேட்பதை விட மடையில் படுத்து கிடப்பது ஒன்றும் கஷ்டமான காரியமாக இருக்காது சார்" என்கிறான்.

தென்கச்சி கோ. சுவாமிநாதன்

# புலிகளுடன் அதிகாரப் பகிர்வு கூடாதெனில் யுத்தத்தை சந்திக்க ஜே.வி.பி தயாரா?

## அமைச்சர் அனுரா கடும் சாடல்



(கொழும்பு)

தமிழீழ வீடுதலைப் புலிகளுடன் பேச்சுவார்த்தை கூடாது. அதிகாரப் பகிர்வு கூடாது எனில் யுத்தத்துக்கு ஜே.விபி தயாரா? என்று வெளிவிவகார அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க கேள்வி எழுப்பியுள்ளார்.

வெளிவிவகார அமைச்சகத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற ஊடகவியாலாளர் மாநாட்டிலிலேயே அமைச்சர் அனுரா இவ்வாறு குறிப்பிட்டார்.

தற்போதைய அரசியல் நிலவரம் குறித்து விளக்க தனது அமைச்சு அலுவலகத்தில் உள்நாட்டு செய்தியாளர்களுடன் இடம்பெற்ற சந்திப்பில் அனுரா, ஜே.வி.பி. போக்கு குறித்து காரசாரமாக விமர்சிக்கும் வகையில் கருத்துக்களையும் வெளியிட்டார்.நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளை பொறுத்த வரை மாறி வரும் சூழலுக்கு ஏற்ப பின்பற்றப்படவேண்டியவை ஆனால் ஜே. வி.பி. அதற்கு விரோதமான கருத்தை கொண்டுள்ளது.

ஆழிப்பேரலை நிவாரணப் பொதுக் கட்டமைப்பை இரத்துச் செய்ய வேண்டும் என ஜே.வி.பி மஹிந்தவுடன் செய்து கொண்டுள்ள உடன்படிக்கையில் வலியுறுத்தியுள்ளது ஆனால் அந்த யோசனையை நாடாளுமன்றத்தில் முன்வைத்தவர் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தான் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு இன,மத, மொழி, பேதமின்றி நிவாரண உதவிகள் சென்றடைய வேண்டும் என்பதற்காகவே அது ஏற்படுத்தப்பட்டது.

விடுதலைப்புலிகளுடன் பேச்சுவார்த்தை நடத்தக் கூடாது என ஜே.வி.பி மற்றுமொரு யோசனையை முன் வைத்துள்ளது. அது போல அதிகாரப் பகிர்விற்கு இடமில்லை என்றும் கூறுகின்றது அப்படியானால் ஜே.வி.பியின் நோக்கம் யுத்தமா? அப்படியொரு யுத்தம் வந்தால் யுத்த களத்தில் இறக்கி அவர்களால் போராட முடியுமா?

ஜே.வி.பி தலைவர் சோமவன்ச அமரசிங்க முதலாவது தேர்தல் பிரசாரக் கூட்டத்தில் நாட்டின் எல்லையைப் பாதுகாக்க முடியாது விட்டால் இராணுவத்தைக் கலைக்க வேண்டும் என வேண்டுகோள் விடுத்துள்ளமையை வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்த வரை ஒரு போதும் இராணுவத்திற்கு விரோதமான கருத்தை கொண்டிருக்கவில்லை தனது ஆட்சிக் காலத்தில் இராணுவம் மீது சந்தேகம் கொள்ளும் வகையில் செயல்பட்டதும் இல்லை உலகில் இராணுவம் இல்லாத நாடு எங்காவது உண்டா? என்பதை ஜே.வி. பி தலைவர் புரிந்து கொள்ள வேண்டும் என்றும் அமைச்சர் அனுரா பண்டாரநாயக்க மேலும் குறிப்பிட்டார்.

(ற-4)

# ஒஸ்லோ பேச்சுகளின் அடிப்படையில் துணைப்படைகள் களையப்பட்டு விட்டன

## இராணுவத்தளபதி தெரிவிப்பு

(கொழும்பு)

இலங்கை அனைத்து துணைப்படைகளும் மூன்று ஆண்டுகளுக்கு முன்பே களையப்பட்டு விட்டன என்று இராணுவத் தளபதி லெப் ஜெனரல் சாந்தகொட்டேகொட விளக்கம் அளித்துள்ளார்.

இராணுவத்தின் 56 ஆம் ஆண்டு நிகழ்வையொட்டி இராணுவ தலைமையக நிகழ்ச்சியில் சாந்த கொட்டேகொட நேற்று முன்தினம் திங்கட்கிழமை பங்கேற்றார்.

அதன் பின்னர் ஊடகம் ஒன்றிற்கு அளித்த நேர்காணலில் அவர் இவ்வாறு தெரிவித்தார்.

கருணா குழுவினருக்கு பின்னால் இராணுவ புலனாய்வுத்துறை இயங்கி வருவதாக தமிழீழ விடுதலைப் புலிகள் குற்றம் சாட்டி வருவதை ஏற்க முடியாது.

மூன்று ஆண்டுகளுக்கு முன்பே ஒஸ்லோ பேச்சுக்களின் அடிப்படையிலான யுத்த நிறுத்த ஒப்பந்தத்தையடுத்து அனைத்து துணைப்படைகளும் களையப்பட்டு விட்டன.

நாட்டில் அமைதி நிலவ வேண்டும் என்று தான் நாங்கள் விரும்புகிறோம் ஆனால் எந்த ஒரு எதிர்பாராத சூழ்நிலையையும் எதிர்கொள்ள இராணுவம் தயாராக உள்ளது நவீன ரக ஆயுதங்களைக் கொள்வனவு செய்ய அனுமதி கேட்டுள்ளோம் வளரும் நாடுகளின் எந்த இராணுவத்துக்கும் அடுத்த நிலை இராணுவமாக 2 ஆவது இராணுவமாக இராணுவம் இருக்கக் கூடாது என்பதே என் விருப்பம் எனத் தெரிவித்தார். (ச-4)

# மஹிந்தவுக்கு ஆதரவாக பிக்குகள் முன்னணி

(கொழும்பு)

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் சுதந்திரக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு ஆதரவாக தேசிய பிக்குகள் முன்னணி துண்டுபிரசுரங்களை பொதுமக்கள் மத்தியில் விநியோகித்துவருகின்றது.

பிரதமர் மஹிந்தவை வெற்றி பெறச் செய்து இந்த நாட்டின் ஜனாதிபதியாக ஆக்குவதே தமது நோக்கம் என அந்தத் துண்டுப்பிரசுரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது. (ற-8)

# 4 கிலோ ஹெரோயினுடன் நபர் கைது

(மன்னார்)

4 கிலோ ஹெரோயின் போதைப்பொருளுடன் நபர் ஒருவரை மன்னார் பொலிஸார் நேற்று முன்தினம் கைது செய்துள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவல் ஒன்றின் அடிப்படையில் பிரஸ்தாபநபரை பொலிஸார் கைது செய்து சோதனை செய்த போது போதைப்பொருள் இருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.

இதனை அடுத்து அவரை பொலிஸார் கைது செய்தனர் கைப்பற்றப்பட்ட போதைப்பொருள் பல கோடி ரூபாய் பெறுமதிவாய்ந்தது என பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

பொலிஸார் சந்தேக நபரை மன்னார் நீதி மன்றில் ஆஜர் செய்தனர்.

இது தொடர்பில் விசாரணைகளை மேற்கொண்ட மன்னார் மாவட்ட நீதிவான் எம்.எம். அப்துல்லா எதிர்வரும் 14ஆம் திகதி வரை பிரஸ்தாபநபரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டுள்ளார்.

(ற-8)

# ரணில் எதிர்வரும் 15 இல் அம்பாறைக்கு விஜயம்

(கொழும்பு)

ஐக்கிய தேசியக்கட்சியின் ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்க எதிர்வரும் 15ஆம் திகதி அம்பாறைக்கு விஜயம் மேற்கொள்ளவுள்ளார்.

அங்கு ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி சம்பாந்துறை, அட்டாளைச்சேனை உட்பட பல பிரதேசங்களில் ஏற்பாடு செய்துள்ள பிரசாரக் கூட்டங்களில் ரணில் விக்கிரமசிங்க பங்கேற்கவுள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கிழக்கு மாகாணத்தில் ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவான பிரசாரங்களை ஏற்கனவே ஆரம்பித்துள்ளது.

இதேவேளை, எதிர்வரும் 15ஆம் திகதி நடைபெறவுள்ள பிரசாரக்கூட்டங்களுக்கு மேலதிகமாக ரணில் விக்கிரமசிங்க மக்களின் கருத்துக்களை கேட்டறியும் நிகழ்வு ஒன்றில் கலந்துகொண்டு மக்களின் கேள்விகளுக்கும் பதிலளிக்கவுள்ளார்.

(ற-4)

# குளோரின் வாயுக் கசிவினால் 9 இராணுவத்தினர் பாதிப்பு

(கொழும்பு)

சிலாபம் பிரதேச சபை காரியாலயத்தில் இருந்த குளோறின் சிலின்டரில் ஏற்பட்ட கசிவினால் காரியாலயத்திற்கு அருகில் உள்ள இராணுவமுகாமில் இருந்த 9 இராணுவ வீரர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்கள் அனைவரும் சிலாபம் ஆதார வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

முகாமின் பாதுகாப்பு கடமைகளில் ஈடுபட்டிருந்த சமயம் இவ்வாயுக்கசிவினால் இவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மோசமாக பாதிக்கப்பட்ட இருவர் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். சிலாப பிரதேச சபையினால் மேற்கொள்ளப்பட்டுவரும் தண்ணீர் தாங்கி சுத்திகரிப்புத் திட்டத்திற்காக இக் குளோறின் சிலின்டர் அங்கு கொண்டுவந்து வைக்கப் பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இவ்வாயுக்கசிவு அருகில் உள்ள வீடுகளுக்குள் பரவியபோதிலும் இராணுமுகாமில் இருந்தவர்களுக்கே பெரும் பாதிப்பு ஏற்பட்டுள்ளது.

இக் குளோறின் சிலின்டர் சுமார் 25 வருடங்கள் பழமை வாய்ந்தது என்றும் அதில் துருப்பிடித்திருந்த ஒரு இடத்தில் இருந்தே குளோறின் வாசுக்கசிவு ஏற்பட்டிருந்ததாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற-4)

தனிநபாகள் அடிக்கடி மறப்பதும் மன்னிப்பதும் உண்டு:
ஆனால், சமூகங்கள் ஒருபோதும் அவ்விதம் செய்யா.
- ஆவ்பரி

வலம்புரி

# ஐ.தே.கட்சியுடன் இணைவது நடைமுறைக்குச் சாத்தியமா ?

நான் ஜனாதிபதியாக வந்தால் விடுதலைப் புலிகளின் தலைவர் வே. பிரபாகரனுடன் நேரடிப் பேச்சுவார்த்தை நடத்துவேன்.

இவ்வாறு சிறிலங்கா சுதந்திரக்கட்சியின ஜனாதிபதி வேட்பாளரும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷ கூறியிருந்தார்.

இவ்வாறு கூறிய பிரதமர் இப்போது 'நான் ஜனாதிபதியாக வந்தால் ஐக்கியதேசியக் கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன்' எனக் கூறியுள்ளார்.

ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பேன் என கூறிய பிரதமர் அது எங்ஙனம் சாத்தியம் என்பது பற்றி எதுவும் கூறவில்லை.

கடந்த மூன்று தசாப்தகாலமாகத் தொடரும் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முடியாமைக்கான பிரதான காரணமே நாட்டின் இரண்டு பிரதான கட்சிகளும் ஒன்று சேராமையாகும்.

சிறிலங்கா சுதந்திரக்கட்சி இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முற்பட்டால் அதனை ஐக்கிய தேசியக்கட்சி எதிர்த்தது.

அதேபோல், ஐக்கிய தேசியக்கட்சி இனப்பிரச்சினைக்கு தீவுகாண முற்பட்டால் அதற்கு சிறிலங்கா சுதந்திரக்கட்சி எதிர்ப்புக்காட்டியது.

இவ்வாறு இரண்டு கட்சிகளுமே ஆள்மாறி ஆள் தமிழரின் பிரச்சினைக்குத் தீர்வுகாண விடாமல் தடுத்தன.

இந்நிலையில், ஐக்கியதேசியக்கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்கு தீர்வுகாண்பேன் என பிரதமர் மகிந்த கூறுவது எவ்வகையிலும் சாத்தியப்படாததொன்று.

அதேவேளை பிரதமர் மகிந்த கூறிப்படி ஐக்கிய தேசியக்கட்சியுடன் இணைந்து இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதற்கு ஜே.வி.பி. சம்மதிக்குமா என்ற கேள்வியை மகிந்தவிடம் கேட்கவேண்டிய தேவையுள்ளது.

பொதுக்கட்டமைப்பு உடன்படிக்கையை ரத்து செய்தல் என்ற உடன்பாட்டிலேயே மகிந்தவும் ஜே.வி.பியும் கூட்டுச்சேர்ந்துள்ளன.

ஜனாதிபதித் தேர்தலில் மகிந்த வெற்றி பெற்றதும் அவருக்கு இருக்கக்கூடிய முதற் பணி, பொதுக்கட்டமைப்பை ரத்துச்செய்வதாகும்.

பொதுக்கட்டமைப்பை இரத்துச்செய்து விட்டபின்னர் மகிந்த நினைப்பதுபோல சமர்தானப் பேச்சு நடக்க மாட்டாது. மாறாக நாட்டில் யுத்தமே வெடிக்கும்.

ஜே.வி.பி., ஹெலஉறுமய போன்ற கட்சிகளுடன் மகிந்த ராஜபக்ஷ என்று கூட்டுச் சேர்ந்தாரோ அன்றே சமாதான பேச்சுக்கு ஆபத்து வந்து விட்டதென்ற உண்மை உணரப்படவேண்டியதொன்றாகும்.

ஆக, தேர்தல் என்று வந்து விட்டால் எந்த வாக்குறுதிகளையும் அள்ளி வழங்கலாம். மக்களை ஏமாற்றி வாக்குப்பெறலாம் எனஅரசியல்வாதிகள் நினைப்பதே இந்த நாட்டிற்கு அழிவாக அமைகின்றது.

எனவே அரசியல் வாதிகள் உண்மையை, நடைமுறைக்கு சாத்தியமானதை பேசவேண்டும். அதுவே அவர்கள் மக்களுக்குச் செய்யும் பெரும்பணியாகும்.

# தொடரும் வன்முறைகள் அனைத்தும் புலிகளுக்கு எதிரான அரசியல் சதியே

## கண்காணிப்புக்குழுவிடம் சு.ப. தமிழ்ச்செல்வன்

(கொழும்பு)

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் தொடரும் வன்முறைகள் அனைத்தும் தமிழீழ விடுதலைப்புலிகளுக்கு எதிரான அரசியல் சதியே என்று தமிழீழ அரசியல்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் போர்நிறுத்த கண்காணிப் புக்குழுவிற்கு அனுப்பியுள்ள கடிதமொன்றில் தெரிவித்துள்ளார்.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளில் அதிகரித்துவரும் வன்முறைகள் மற்றும் ஆட்கொலைகளால் தமிழ் மக்கள் மிகவும் அதிர்ச்சியும் குழப்பமும் அடைந்துள்ளனர். அதிகரித்துவரும் இந்த படுகொலைகள் தமிழீழ விடுதலைப் புலிகள் மீது அவமதிப்பை உருவாக்கும் வகையில் நடத்தப்பட்டுவருகிறது.

இராணுவ ஆக்கிரமிப்புப் பகுதிகளிலிருந்து எமது அரசியல் துறை போராளிகள் பாதுகாப்புப் காரணங்களுக்காக வெளியேறிய பின்னர் இது போன்ற வன்முறைகள் அடிக்கடி நிகழ்வதை சுட்டிக்காட்டுகிறோம்.

இந்த வன்முறைகளுக்குப் பின்னால் அரசியல் சதி இருககிறது தமிழீழவிடுதலைப்புலிகள் மீது குற்றம்சாட்டுவதற்காகவே இந்த வன்முறைகள் நடாத்தப்படுகின்றன.

அப்பாவி மக்களை படுகொலைசெய்து விட்டு தமிழீழ விடுதலைப் புலிகளுககு எதிரானவர்கள் என்பதால் விடுதலைப்புலிகள் படுகொலை செய்துள்ளார்கள் என்று கூறப்பட்டு வருகிறது.

நுட்பமாக திட்டமிட்டு தமிழீ விடுதலைப்புலிகள் மீது பழியை சுமத்தும் அரசியல் நோக்கங்கள் இந்த வன்முறைச் சம்பவங்களுக்குப்பின்னால் உள்ளன என்பதில் எங்களுக்கு சந்தேகம் எதுவும் இல்லை.

இந்த வன்முறைகள் தொடர்பாக முறையான விசாரணைகள் ஏதுமின்றி பயன்தரக்கூடிய குற்றத்தடுப்பு முறைகளையும் நடைமுறைப்படுத்தாமல் ஆயுத் குழுககளின் செயற்பாடுகள் தொடர்பான யுத்த நிறுத்த ஒப்பந்த விதிமுறைகளையும் நடைமுறைப்படுத்தாமல் அரசும் அதன் இராணுவப் பேச்சாளரும் புலிகள் மீது சேறுவாரிப் பூசும் பிரசாரத்தில் ஈடுபட்டிருக்கின்றனர்.

யுத்தநிறுத்தத்தை பற்றுறுதியோடு ஏற்றுக்கொண்ட தரப்பு என்ற முறையில் இந்தக் குற்றச்சாட்டுக்களை நாம் அடியோடு நிராகரிக்கின்றோம். யுத்த நிறுத்த உடன்பாட்டின் 1.8 பிரிவு குறித்தும் அந்தப் பிரிவை மீறும் வகையில் தமது அரசியல் தலைவர்களுக்காக இத்தகைய இழி செயல்களைப்புரியும் இலங்கை இராணுவம் மற்றும் அவற்றின் துணைப்படைகள் குறித்தும் தங்களுக்குள்ள வரையறைகளுக்குள் அர்த்தமுள்ள வகையில் தலையீடு செய்யுமாறு கண்காணிப்புக்குழுவை நாங்கள் கேட்டுக்கொள்கிறோம் என மேலும் அக்கடிதத்தில் சு.ப.தமிழ்ச்செல்வன் குறிப்பிட்டுள்ளார். (து)

# உரிய காலத்தில் பருவ மழை இல்லை காலபோக நெற்செய்கை பாதிப்பு

(பொன்னாலை)

யாழ். மாவட்டத்தில் பருவ மழை உரிய காலத்தில் பெய்யாத்தால் கால போக நெல் விதைப்பு பாதிக்கப்பட்டுள்ளது. ஆங்காங்கே கிணறு வசதியுள்ள விவசாயிகள் நீர் இறைத்து நிலம் நனைத்து உழுது நெல் விதைக்கும் பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.

கிணறு வசதியில்லாத பகுதியில் உள்ள நெற்காணிகளில் நெல்விதைப்பை மேற்கொள்ள முடியாத நிலையில் விவசாயிகள் உள்ளனர்.

புழுதி விதைப்பை மேற்கொண்டால் மழை பெய்யா விடின் அந்தநெல் அவிந்து மூளைக்காது அழிவடைந்து விடும் ஏன்றும் விவசாயிகள் கவலை தெரிவிக்கின்றனர். உரிய பருவத்தில் இன்னமும் மழை பெய்யவில்லை. இதனால் இவ்வருட நெல்விதைப்பு என்னவாகுமோ எனவும் விவசாயிகள் அச்சம் தெரிவிப்பதுடன் மழைக்காகவும் இவர்கள் காத்திருக்கின்றனர். (ற-49)

# குடிநீர் விநியோகம் இடைநிறுத்தம் பொதுமக்கள் பெரும் சிரமம்

(காரைநகர்)

காரைநகரில் பிரதேச சபையினால் வழங்கப்பட்டு வந்த குடிநீர் விநியோகம் இன்று முதல் நிறுத்தப்பட்டுள்ளதால் சுமார் 3ஆயிரதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் படு கஷ்டங்களை அனுபவிக்க நேர்ந்துள்ளது.

இது பற்றி மேலும் தெரிய வருவதாவது, காரைநகரில் காரை அபிவிருத்தி சபையினராலும் பிரதேச சபையினராலும் குடி நீர் விநியோகம் மேற்கொள்ளப்பட்டுவந்தது.

இதனால் ஓரளவு தட்டுப்பாடு இன்றி அனைத்துப் பொதுமக்களும் குடிநீரைப் பெற்று வந்தனர். அன்றாடப் பாவனைக்கு தண்ணீருக்கு தட்டுப்பாடு நிலவும் இந்நேரத்தில் காரை நகர் பிரதேச சபையினரால் வழங்கப்பட்டுவந்த குடிநீர் விநியோகம் நிறுத்தப்பட்டுள்ளது.

இக் குடிநீர் விநியோக நிறுத்தம் சம்பந்தமாக காரைநகர் பிரதேச சபையினருடன் தொடர்பு கொண்டு கேட்டபோது காரைநகர் பிரதேச செயலகம் இதற்கான நிதியைப் பெற்றுத்தர நடவடிக்கை மேற்கொள்ளாமையே இதற்க்காரணம் எனத் தெரிவித்துள்ளனர்.

நிறுத்தப்பட்ட குடிநீர் விநியோகத்தை உடன் ஆரம்பிக்குமாறு பொதுமக்கள் தரப்பில் பலரும் பிரதேச சபையினைக் கோரியுள்ளனர் எனவும் தெரியவருகிறது. (த-246)

# வித்திய விஜய ஶ்ரீ சம்மண விருது வழங்கி கௌரவிப்பு

(யாழ்ப்பாணம்)

வலிகாமம் கல்வி வலயத்தில் சிறந்த ஆலோசகர், அதிபர், ஆசிரியர் சேவையாற்றி எட்டுப்பேர் சர்வதேச ஆசிரியர் தினத்தில் ஜனாதிபதியின் விருது வழங்கிக் கௌரவிக்கப்பட்டுள்ளனர்.

ஏழாலை மேற்கு சைவ சன்மார்க்க வித்தியாசாலை அதிபர் செ. சிவ நடராசா,இளவாலை மெய்கண்டான் மகா வித்தியாலய அதிபர் ஏ. பேரம்பலம், ஆசிரிய ஆலோசகர் பி. நாகரத்தினம் (விஞ்ஞானம்) ஆசிரியர்களான திருமதி எஸ்.நாகேஸ்வரன், கிரிஷ்ற்றி (இளவாலை கொன்ற்வென்ட்) , திருமதி சி.நந்தினி (இராமநாதன் கல்லூரி), ச.கிருபானந்தன் (அருணோதயாக் கல்லூரி), எஸ்.துஸ்யந்தன் (வட்டு மத்திய கல்லூரி), செல்வி சி.சிவமலர், (மூளாய் சைவப்பிரகாச வித்தியாசாலை) ஆகியோருக்கு வடக்கு-கிழக்கு மாகாணக்கல்வி அமைச்சினால் ஜனாதிபதியின் 'வித்திய விஜய ஶ்ரீ சம்மண' என்ற விருது கடந்த ஆறாம் திகதி வழங்கிக் கௌரவிக்கப்பட்டது. (ற)

# பரு.சாரதா சேவாச்சிரமத்தின் மருத்துவ சேவைகள் விஸ்தரிப்பு

பருத்தித்துறை ஶ்ரீ இராமகிருஷ்ண சேவாச்சிரமம் ஏழைகளுக்கு வழங்கி வரும் இலவச மருத்துவ சேவைகளை விஸ்தரிக்கவுள்ளது.

இச்சேவாச்சிரம இலவச மருத்து வசதிகளை விஸ்தரிப்பதற்காக இந்தியா சுமார் 12 இலட்சம் பெறுமதியான வாகனம் ஒன்றை அன்பளிப்புச் செய்துள்ளது.

இவ் வாகனத்தை இந்தியத் தூதுவர் திருமதி நிருபமராவ் கொழும்பில் உள்ள இந்தியத் தூதுவர் வாசஸ்தலத்தில் வைத்து பருத்தித்துறை ஶ்ரீ இராமகிருஷ்ண சாரதா சேவாச்சிரம பீடாதிபதி சுவாமி சித்ருவானந்தாவிடம் கையளித்தார்.

இந் நிகழ்வில் இந்திய உதவித்தூதுவர் ஆலடி அரன் மாணிக்கமும் கலந்துகொண்டார். இந்தியத் தூதுவர் கிளிநொச்சி அரசினர் ஆதாரவைத்தியசாலைக்கு 2இலட்சம் ரூபா பெறுமதியான மருந்து வகைகளையும் யாழ்.மாநகர சபை பொதுநூலகத்திற்கு நூல்களையும் அன்பளிப்புச் செய்யவுள்ளார் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ற-52)

# போதைப்பொருள் கடத்தல்காரருக்கு ஜே.பி. பதவி; மீண்டும் சர்ச்சையில் சிக்கினார் மேர்வின்

(கொழும்பு)

போதைப்பொருள் கடத்தலில் ஈடுபடும் குடுலால் எனப்படும் லால் பீரிசிக்கு அகில இலங்கை சமாதான நீதிவானாக பரிந்துரை செய்ததையடுத்து பிரதியமைச்சர் மேர்வின் சில்வா மீண்டும் சர்ச்சையில் சிக்கியுள்ளார்.

மாளிகாவத்தைப் பிரதேசத்தில் போதைப்பொருள் கடத்தில ஈடுபடும் முககிய பாதாள உலகக்குழுத்தலைவர் குடுலால் எனப்படும் லால் பீரிஸ் அகில இலங்கை சமாதான நீதிவானாக நியமிக்கப்பட்டுள்ளார்.

நீதியமைச்சினால் வழங்கப்பட்ட நியமனத்திற்கு அமைய கடந்த 7ஆம் திகதி கொழும்பு மேலதிக நீதிவான் சுஜீவ நிஸ்ஸங்க முன்னிலையில் அவரது பதவி ஏற்பு நிகழச்சி நடந்தது. பிரதியமைச்சர் மேர்வின் சில்வாவின் பரிந்துரையை அடுததே சமாதான நீதிவான் பதவி வழங்கப்பட்டுள்ளது என ஊடகஙகளில் வெளியாகும் தகவல்கள் உண்மையாயின் அவருக்கு வழங்கப்பட்ட பதவியை ரத்துச் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

ஒருவரை சமாதான நீதிவானாக நியமிக்குமாறு பரிந்துரை செய்வதற்கான அதிகாரம் மக்கள் பிரதிநிதிகளுக்கு உள்ளது என்றும் அதற்கமையவே தான் லாலின் பெயரை பரிந்துரை செய்ததாகவும் பிரதியமைச்சர் மேர்வின்சில்வா தெரிவித்துள்ளார் எந்த வொரு குற்றச் செயலிலும் ஈடுபடாதவர் லால் என்று கிராம சேவையாளர் அறிக்கையும் பொலிஸ் அறிக்கையும் உள்ளது என்று கூறும் மேர்வின் சில்வா அவருக்கு எதிராக எந்தவொரு நீதிமனறத்திலும் வழக்குகள் இல்லை என்றும் விளக்கம் அளித்துள்ளார்.

லால் தொடர்பில் வெளியாகும் தகல்களின் உண்மை நிலையை அறிந்து தனக்கு அறிக்கையும் சமர்ப்பிக்கு மாறு அதிகாரிகளுக்கு நீதியமைச்சர் ஜோன் செனவிரத்ன உத்தர விட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்படுகிறது. (ற)

# தினசரி தியானம்



## விவேகச் சிந்தனைகள்

நம்மை தமது பணியாளர்களாக கடவுள் படைக்கவில்லை. நாமும் கடவுளுக்கு சமமானவர்கள், நண்பர்கள் என்று தெரிந்துகொள்ளும் போது சமத்துவத்தையும் சுதந்திரத்தையும் நாம் அடைகின்றோம். நித்தியமான பரம்பொருளிடம் இருந்து இம்மியளவு நாம் விலகியிருக்கும் வரை அச்சம் நம்மை விட்டு அகலாது.

சுவாமி விவேகானந்தர்

## யாழ். குடாநாட்டில்

# தேர்தல் கண்காணிப்பில் 'பவ்ரல்' ஈடுபடும்

(யாழ்ப்பாணம்)

யாழ்.குடாநாட்டில் ஜனாதிபதித் தேர்தல் கண்காணிப்பு நடவடிக்கைகளில் பவ்ரல் அமைப்பு இம்முறை ஈடுபடுமென்று யாழ். மாவட்ட உதவித்தேர்தல் ஆண்ணயாளர் அலுவலகம் அறிவித்துள்ளது.

வன்முறைகள் அற்ற நீதியானதும் நியாயமானதுமான தேர்தல் நடத்தப்படுவதை உறுதிப்படுத்தும் வகையில் பவ்ரல் அமைப்பு கண் காணிப்புப் பணியில் ஈடுபடவுள்ளது.

இதற்காக எதிர்வரும் தேர்தல்காலத்தில் பவ்ரல் அமைப்பின் ஆயிரத்திற்கும் மேற்பட்ட தேர்தல் கண்காணிப்பாளர் கண்காணிப்புக் கடமையில் ஈடுபடுத்தப்படவுள்ளனர் என்றும் தேர்தல் ஆணையாளர் அலுவலகம் தெரிவிக்கின்றது. (இ

# ஐரோப்பிய ஒன்றியத்திற்கு நீதிசொல்லும் தபாலட்டை

(கொழும்பு)

ஐரோப்பிய ஒன்றியத்திடம் நீதிசொல்லும் தபாலட்டை நடவடிக்கைகளில் பங்கேற்குமாறு ஐரோப்பிய தமிழர் சமாதான முன்னெடுப்பு நிறுவனம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

தமிழீழ விடுதலைப்புலிகள் மீது ஐரோப்பிய ஒன்றியம் பயணத்தடை விதித்துள்ளது. இது தொடர்பில் அவ்வமைப்பு விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐரோப்பிய ஒன்றியத்தினால் கடந்த மாதம் 26ஆம் திகதி வெளியிடப்பட்ட இலங்கைத் தீவின் இனச்சிக்கல் தொடர்பான அறிக்கை ஐரோப்பாவால் தமிழர்நெஞ்சங்களை கவலைக்குள்ளும்,கொதிப்பிற்குள்ளும் தள்ளியுள்ளது.

ஒடுக்கப்பட்டு இன அழிப்பிற்குட்பட்ட தமிழ் மக்களின் நீதியான போரினை பயங்கரவாதமாகவும் ,வன்முறையாகவும் விபரிக்கும் உட்கிடக்கையுடன் ஐரோப்பிய ஒன்றியம் விடுத்த அறிக்கை தவறானதும் இலங்கை பேரினவாதிகளை உற்சாகப்படுத்தி போரிற்கு இட்டுச் செல்வதுமாகும். இது ஐரோப்பாவால் தமிழ் மக்களின் உணர்வுகளை புண்படுத்தியுள்ளது.

இம் மக்கள் உணர்வுகளை ஜனநாயக மாண்புடன் எடுத்தியம்பும் விதத்திலான தபால் அட்டைகள் அச்சீடப்பட்டு ஐரோப்பா எங்கும் விநியோகிக்கப்படுகின்றது.

ஐரோப்பாவில் செயற்படும் தமிழர் அமைப்புக்கள் ,சங்கங்கள்,இளையோர் அமைப்புக்கள் என பல தரப்பும் இந்தத் தபால் அட்டைகளை விநியோகிக்கின்றன.

இவற்றினைப்பெற்று நிரப்பி ஐரோப்பிய அரசுகளுக்கு எங்கள் மன உந்துதலை வெளிப்படுத்த முன்வருமாறு அனைத்து ஐரோப்பாவாழ் தமிழ்மக்களையும் உரிமையுடன் அழைக்கின்றோம்.

எதிர்வரும் காலங்களில் ஐரோப்பாவாழ் தமிழ் மக்களின் எண்ணங்களுக்கும் உணர்வுக்கும் மதிப்புக்கொடுத்து செயற்படுமாறு ஐரோப்பிய அரசுகளை கோரும்நடவடிக்கையாகவும் இது அமைகின்றது என அவ்வறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ-4)

## தமிழ்த்தேசிய எழுச்சிமாநாடு

(திருகோணமலை)

திருகோணமலையில் தமிழ்த் தேசிய எழுச்சி மாநாடு எதிர்வரும் 22ஆம் திகதி நடைபெறவுள்ளது.

மாநாட்டிற்கான ஏற்பாட்டை தமிழ்த்தேசிய எழுச்சி மாநாட்டுக்குழு மேற்கொண்டு வருகிறது.

திருகோணமலை உள்துறைமுக வீதியையடுத்துள்ள ஆளுனர் பணிமனை முன்னால் உள்ள விளையாட்டு மைதானத்தில் ஏழுச்சி மாநாடு நடைபெறவுள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் க.துரைரட்ணசிங்கம் தெரிவித்துள்ளார். (இ-8)

## பொலிஸாரின் விளக்க மறியல் 25 ஆம் திகதி வரை நீடிப்பு

தமிழீழ விடுதலைப்புலிகளின் மன்னார் நிர்வாகப் பகுதியில் அனுமதியின்றி உள் நுழைந்ததால் கைதுசெய்யப்பட்ட மூன்று பொலிஸாரை விளக்கமறியலை எதிர்வரும் 25ஆம் திகதிவரை நீடித்து தமிழீழ நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மூன்று பொலிஸாரும் காவல்துறையினரால் கிளி.மாவட்ட தமிழீழ நீதிமன்றில் நேற்று முன்னிலைப் படுத்தப்பட்டனர். மூவரின் குற்றச்செயல்கள் தொடர்பாக தமிழீழ காவல் துறையின் பரிசோதகர் பொன்னையா பவானி நீதியாளருக்கு எடுத்துரைத்தார்.

அதில்,தமிழீழ காவல்துறையினரால் மூன்று பொலிஸார் மீதான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. எமது பகுதிக்குள் அனுமதியின்றி நுழைந்தாக பொலிஸார் கூறும் காரணங்கள் ஏற்புடையதாக இல்லை .இவர்களின் உள்நுழைவு தொடர்பான தமிழீழ காவல்துறையின் புலன்விசாரணை நடைபெற்று வருகிறது என்று குறிப்பிட்டார். இந்த உள்நுழைவானது யுத்தநிறுத்த மீறலாகும் மூன்று பொலிஸாரும் ஒரு படைப் பிரிவைச் சேர்ந்தவர்களாக இருந்து கொண்டு தவறுதலாக உள்நுழைந்து விட்டோம் எனக் கூறும் காரணம் ஏற்புடையதல்ல என்றும் எடுத்துரைத்தார். (இ-4)

# நினைவு நாள்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் பிரம்படிப் பகுதியில் 1987 ஆம் ஆண்டு இந்தியப்படையினரால் படுகொலை செய்யப்பட்ட அப்பாவிப் பொதுமக்களின் 18 ஆம் ஆண்டு நினைவுநாள் நாளை பிரம்படிப் பகுதியில் அமைந்துள்ள நினைவுத்தூபியடியில் இடம்பெறவுள்ளது. (இ-8)

## சூட்டுக்காயத்துடன் சடலம் மீட்பு

திருகோணமலையில் துப்பாக்கிச் சூட்டுக் காயத்துடன் சடலம் ஒன்று பொலிஸாரினால் கண்டெடுக்கப்பட்டுள்ளது. அச்சடலம் ஈ.பி.டி.பி. உறுப்பினர் சிவலிங்கம் விஸ்வராஜா (வயது 35) என அடையாளம் காணப்பட்டுள்ளார். திருகோணமலை குச்சவெளிப் பிரதான வீதியில் உள்ள ஆதிப்போட்டை சந்தியில் துப்பாக்கிச் சூட்டுக்காயங்களுடன் சடலம்மொன்று காணப்படுவதாக உப்புவெளிப் பொலிஸாருக்கு தகவல் கிடைத் தது.

இதனையடுத்து அப்பகுதிக்குச் சென்ற பொலிஸார் சடலத்தை மீட்டு திருமலை வைத்தியசாலைக்கு அனுப்பிவைத்தனர். (இ-4)

# புலிகளின் வாகனத் தொடரணி...

இதேவேளை மட்டக்களப்பில் இடம்பெற்ற தாக்குதலில் கேணல் பானு கொல்லப்பட்டதாகவும் போராளிகள் இறந்ததாகவும் அரச ஆதரவு ஊடகங்களில் செய்தி வெளியாகிய நிலையில் கேணல் பானு உண்மையை விளக்கி தெளிவுபடுத்தியிருக்கிறார்.

ம்ட்டக்களப்பு வவுணதீவில் சிறிலங்கா அரச புலனாய்வுத்துறையினரும் துணைப் படையினரும் தாக்குதல் நடத்த முயற்சித்தது குறித்து புலிகளின் குரல்வானொலிக்கு மட்டக்களப்பு அம்பாறை மாவட்ட சிறப்புத் தளபதி கேணல் பானு பேட்டியளித்தார்.

அப் பேட்டியில் கேணல் பானு கூறியுள்ளதாவது ;

எங்களுடைய வாகனத் தொடரணி நேற்று முன்தினம் இரவு 9.15 மணியளவில் கொக்கட்டிச் சோலையில் இருந்து கரடியனாறு நோக்கி நகர்ந்து கொண்டிருந்தது.

வவுணதீவு சிறிலங்கா இராணுவ முகாமை அண்மித்த பகுதியில் வாகனத்தொடரணிசென்றபோது சிறிலங்கா இராணுவப்புலனாய்வுத் துறையினரும் அவர்களுடன் சேர்ந்த துணைப்படைகளும் தாக்குதல் நடத்த முற்பட்டன.

எமது போராளிகள் திருப்பித்தாக்கியதில் அவர்கள் விரட்டியடிக்கப்பட்டனர். அதில் போராளியொருவர் காயமடைந்தார்.

தொடர்ந்து நடத்திய தாக்குதலையடுத்து அவர்கள் வவுணதீவு இராணுவ முகாமிற்குள் சென்று விட்டார்கள்.

இதையடுத்து தொடர்ந்து முன்னேறுவது குறித்து எனது அனுமதியை போராளிகள் தொடர்பு கொண்டு கேட்டனர்.

சமாதான சூழலை மேற்கொள்ள வேண்டியிருப்பதால் தாக்குதலை நிறுத்தி விட்டு மீளத்திரும்பும்படி கட்டளையிட்டிருந்தேன் அவர்கள் இதனையடுத்து போராளிகள் எமது தளம் நோக்கித் திரும்பிவிட்டனர். இது தான் நடந்த உண்மை.

இதை திரிபுபடுத்தி பல ஊடகங்கள் நான் காயமடைந்தாகவும் இறந்தாகவும் தொடர்ந்து பொய்ப்பிரசாரங்களை மேற்கொண்டு வருகின்றனர் என்றார். (இ-4)

# புலிகளின்...

முன்னர் அறிமுகப்படுத்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டத்தை யுனிசெப்பினால் நியமிக்கப்படும் மதியுரைஞர் தலைமையில் ஒரு குழுவை அமைத்து மீள் பரிசீலனை செய்வதற்கும் இணக்கம் காணப்பட்டது.

யுனிசெப்பின் பிரதிநிதிகள் ,விடுதலைப் புலிகளின் பிரதிநிதிகள் ,தமிழர் புனர்வாழ்வுக்கழகப் பிரதிநிதிகள் ஏனைய சிறுவர் நலன் விரும்பிகள் குழுவினர் இக்குழுவில் உள்ளடக்கப்படுவர்.

தமிழீழ விடுதலைப்புலிகளின் அரச அரச சார்பற்ற நிறுவனங்களின் இணைப்பாளர் மு.தியாகராஜா ,சமாதான செயலகத்தின் பணிப்பாளர் புலித்தேவன் ஆகியோர் இச் சந்திப்பில் உடன் இருந்தனர். (இ-4)

# தொலைபேசி விற்பனையாளரை...

களில் ஈடுபடும் அமைப்புகளுக்கு தொலைபேசிகளை விற்பனை செய்தல் தொடர்பாக கிடைக்கப்பெற்ற தகவல்களுக்கமைய இவர்கள் குறித்து விசாரணை செய்ய வேண்டியுள்ளதாக கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினர் நீதிவானிடம் வேண்டுகோள்விடுத்தனர்.

இதையேற்று கொழும்பில் இயங்கும் 16 தொலைபேசி விற்பனை நிலையங்கள் குறித்து விசாரணைகளை மேற்கொள்ள நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்தது.

கதிர்காமரின் கொலையுடன் தொடர்புடையவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள மாணிக்கம் தமிழினியன், ரெங்கன் ஜனகன் ,ஐய்யர் ராஜ்குமார், முத்தையா சகாயதேவன், இசினோர் ஆரோக்கியநாதன் ஆகியோர் நீதிமன்றத்தில் முன்னிலைப்படுத்தப்பட்டனர்.

மேலதிக விசாரணை தொடர்பிலான அறிக்கையையும் சமர்ப்பித்த குற்றப்புலனாய்வுப்பிரிவினர் கொலையின் பிரதான சந்தேகநபரை கைதுசெய்யவும் ,கொலைக்கு பயன்படுத்தப்பட்ட ஆயுதத்தை கைப்பற்றவும் மேலதிக விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு வருவதனால் இந்த சந்தேக நபர்களை தொடர்ந்து தடுத்து வைக்க உத்தரவிடுமாறு கேட்டனர்.

இதையடுத்து அனைவரையும் எதிர்வரும் 24 ஆம் திகதிவரை தொடர்ந்து விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது.(இ

# இளம்பரிதி-கண்காணிப்பு...

போராளிகள் வெளியேறியமையை அடுத்து யாழ்.மாவட்டத்தில் கொலைகள் ,களவுகள் , கொலை அச்சுறுத்தல்கள், போதைப் பொருள் பாவனை, கோஷ்டிமோதல்கள் , பெண்கள் மீதான் வன்முறைகள் உள்ளிட்ட சமூகவிரோதச் செயல்கள் அதிகரித்துள் என.

, சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டிய இலங்கைப் படையினரும் பொலிஸாரும் அடாவடித்தனங்களுக்கும் அத்துமீறல்களுக்கும் துணைபோகின்றனர்.

குறிப்பாக கசிப்பு உற்பத்தியாளர்களைச் சந்தித்து கையூட்டுப்பெறுவது ,பொலிஸ் உயர் மட்டத்தால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பரவலாக இடம்பெறுகின்றது.

நடைமுறைக்கு வந்த அவசரகாலச் சட்டம் படையினரதும், பொலிஸாரினதும் ,இராணுவத் துணைக்குழுக்களினதும் அத்துமீறல்களுக்கு அங்கீகாரம் வழங்கியுள்ளது.

அண்மையில் இடம்பெற்ற குழுமோதல்களில் ஈடுபட்டோருக்கு படையினரும், பொலிஸாரும், துணைக்குழுக்களும் கைக்குண்டுகளையும் வழங்கியிருந்தார்கள் என பொது மக்கள் எமக்கு ஆதாரத்துடன் தகவல் தந்துள்ளார்கள்.

உடுவில் பகுதியில் அண்மையில் வீடியோக்கடை உரிமையாளர் ஒருவர் சுட்டுக் கொல்லப்பட்டமைக்கு உடுவில் பகுதியில் உள்ள இராணுவப் புலனாய்வுப் பிரிவுப் பொறுப்பாளர் மகேஸ்பண்டார என்பவரே காரணமானவர் என்பதற்கான ஆதாரங்களை மக்கள்எமக்கு ஆதாரத்துடன்தெரியப்படுத்தியுள்ளனர்.

அத்துடன் அல்லைப்பிட்டிப்பகுதியில் இளந்தாய் மீது இராணுவச் சிப்பாய் பாலியல் வன்முறையைப் புரிந்துள்ளார்.

நாம் யாழ்.மாவட்டத்தை விட்டு வெளியேறியமையையடுத்து இடம் பெறும் சமூகவிரோதச் செயல்களுக்கு படையினரும்; பொலிஸாரும் நேரடியாகவும் மறைமுகமாகவும் துணை போகும் நிலையில்,போர்நிறுத்த உடன்படிக்கை நெருக்கடியான நிலையில் யாழ். மாவட்டத்தின் நிலைமை பாரதூரமானதாக நாம் கருதுகிறோம்.

சிங்கள பௌத்த பேரினவாதம் ஒரு நலிவுற்ற சமுதாயத்தை உருவாக்க முயல்கிறார்கள்.சட்டம் ஒழுங்கைப் பேணவேண்டியவர்கள் சீர்குலைவிற்கு அணிசேர்க்கின்றனர்.

போர்நிறுத்தக் கண்காணிப்புக்குழுவினர் யாழ்.மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகளை சீர்தூக்கிப் பார்த்து மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ள நம்பிக்கையீனத்தை உடனடியாக அகற்ற துரிதமாகச் செயற்படவேண்டுமென நாம் எதிர்பார்க்கின்றோம் என்று இளம்பரிதி தெரிவித்தார். (இ-8)

மனோகரா யாழ்.
பார்த்திபன் .லட்சுமிராய். வடிவேல்
நடித்த
குண்டக்க மண்டக்க...
கா:நே: 10:30, 02:30, 6:30, 9:30 (பு:நே)

நாதன்ஸ் யாழ்ப்பாணம்.
சரத்குமார். வைகைப்புயல் வடிவேலு
நமீதா நடித்த
சாணக்கியா
காட்சி நேரம்:
10.30, 2.30, 6.30, 9.30(பு.நே)

நிறைஞ்சனாஸ் சங்கானை
விக்ரம் .லைலா. விவேக்
நாசர் மற்றும் பலர் நடித்த
தில்
கா.நேரம்: 11.00, 2.45, 6.00 (பு நே)

இப் பத்திரிகை வலம்புரி அன்.கோ ஸ்தாபனத்தாரால் இல.3 இரண்டாம் ஒழுங்கை, பிறவுண்றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 12.10.2005 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.